பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
# தீபம்
23.08.2020 தீபம் – 239
இணையப் பதிப்பு



மலைக்கிராமத்தில் ஓர் கல்வியாலயம்.

# 13வது திருத்தச் சட்டத்தை நீக்க.. இந்தியா அனுமதிக்காது !!!



## லெபனானின் குண்டுவெடிப்பும் இஸ்ரேலின் பிராந்திய இருப்பும்

## தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமைக்கு வழி உண்டா ?

## தேரர்கள் மகாத்மியம்...!





## சனாதிபதியின் ஒரே நாடு ஒரே சட்டம் சொல்வதென்ன?



## செயற்கை நுண்ணறிவு
ARTIFICIAL INTELLIGENCE

## உலக்கை தேய்ந்து உளிப்பிழியானதோ!
கூட்டமைப்புக்குள் உட்கட்சி முரண்பாடு !
- குருபார்வை -



# தடுப்பு மருந்தும், வல்லாதிக்க அரசியலும்

## இடர்காலப் பதிவுகள்

**உலக நிலவரம்**

தொற்றாளர்கள் **23.63 மில்லியன்**

இறப்பு **813,419**

குணமடைந்தோர் **16.13 மில்லியன்**

**இலங்கை நிலவரம்**

தொற்றாளர்கள் **2953** சிகிச்சை பெறுவோர் **130** குணமடைந்தோர் **2811**

- கணபதி சர்வானந்தா -

உங்கள் எதிரில் வருபவர் எவரையாவது நிறுத்தி “உலகம் உய்வதற்காக உடனடியாகச் செய்தாக வேண்டியது என்ன? என்று கேட்டுப்பாருங்கள். “கொரோனத் தொற்றுக்கு எதிரான தடுப்பு மருந்தொன்றைக் கண்டு பிடிப்பதுதான் தற்போதைய தேவை” என்று பதில் சொல்லிவிடுவார். அவ்வளவுக்கு மனித மனம் நொந்துபோயிருக்கிறது. பரந்து விரிந்த உலகம் கொரோனாவால் தன்னைச் சுருக்கிக் கொண்டுவிட்டது. தொழில் நுட்ப மேம்பாட்டினால்,உலகத்தை வீடாகக் கண்ட மக்கள் கொரோன முடக்கத்தின் பின்னர் வீட்டை உலகமாகக் காணத் தொடங்கினர். மனித மனங்களில் பாரிய மாற்றத்தைக் கொண்டு வந்த, விசித்தரமானதொன்று என்று கண்டறியப்பட்ட கொரோனா அதன் வீரியத்தைத் தொடர்ந்து உலகுக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது. அது பரவத்தொடங்கியதுக்குப் பின்னால், உலகில் எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. உலகம் எவ்வளவு விடயங்களைப் புதியதாகக் கற்றிருக்கிறது. கொரோன தந்த பாடங்கள் மூலம் கற்கைகள் தொடர்கின்றன. இன்னும் என்னனென்ன நடக்கவிருக்கிறதோ? தெரியிவில்லை! என்ற அச்சமே மிச்சமாக நெஞ்சை நிரப்பிக் கொள்கிறது.

நாட்டிலும், வீட்டிலும், ஏன் இந்த உலகத்திலும் பல மாற்றங்களைச் செய்த கொரோனா எல்லாவற்றிலும் விட சர்வதேச அரசியலில் ஏற்படுத்தி இருக்கிற மாற்றங்கள்தான் சொல்லில் அடங்காதவை. நூற்றுக் கணக்கான நாசகாரிகளும், ஆயிரக்கணக்கான ஏவுகணைகளும், இலட்சக் கணக்கான பீரங்கிகளும் சேர்ந்து கொண்டு செய்ய முடியாத பல அரசியல் மாற்றங்களைக் கொரோனா செய்திருக்கிறது. இன்னும் செய்துகொண்டிருக்கிறது.

வானுலக வல்லரசு யார் ? என்ற போட்டி, தற்போது கொரரோனாவுக் கான தடுப்பு மருந்தைக் கண்டு பிடிக்கின்ற வல்லரசுப் போட்டியை நோக்கித் திசைதிருப்பப் பட்டிருக்கிறது. இப் போட்டியில் “வென்றது நான் ” என்று சொல்லி, மருந்தொன்றைக் கண்டுபிடித்ததோடு மட்டுமல்லாது, மற்ற நாடுகளுக்கும் தரலாம் என்று சொல்லி இருக்கிறது ரஷியா. வியாபார ரீதியாக அதற்கான தயாரிப்பு வேலைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் ரஷியா கண்டுபிடித்த தடுப்பு மருந்தின் தரம் பற்றிப் பேசிய அமெரிக்கா, அது பற்றிப் பூதகரச் செய்தியொன்றை வெளியிட்டு ரஸ்யாவின் தயாரிப்பின் மீது மக்களை அவநம்பிக்கை கொள்வதற்கான தொரு பெரு வெளியைத் திறந்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. மருத்துவ ரீதியிலான அனைத்து பரிசோதனை நடைமுறைகளையும் அந்த நாடு பூர்த்தி செய்ததா என்ற சந்தேகத்தை சர்வதேச மருத்துவ வல்லுநர்களும் எழுப்பியுள்ளதால் அவர்கள் பின்னணியிலும் அமெரிக்க அரசியலா? என்ற சந்தேகமும் வலுவடைகிறது. வேதனையிலும் அரசியல் வியாபாரத்தைச் செய்ய முனைகிறதா அமெரிக்க வல்லரசு? என்பது பற்றி மக்கள்தான் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

இருந்தாலும், ரஷ்யா விடுவதாக இல்லை. வேறு நாடுகளுக்கு அவற்றை விற்றுச் சம்பாதிப்பதல்ல எமது நோக்கம். எமது நாட்டில் தயாரான வைரஸ் எதிர்ப்பு மருந்தை எமது நாட்டு மக்களுக்கு வழங்கும் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த விருக்கிறோம் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் சூளுரைத்திருக் கிறார். ரஷியா மட்டுமல்ல பல நாடுகள் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்கின்ற ஆராய்ச்சியில் தற்போது ஈடுபட்டுக் கொண்டிருக் கின்றன. பல கட்டங்களாக நடந்து வருகின்ற கொரோனாத் தடுப்பு மருந்து தயாரிக்கும் இந்த முயற்சியில், உலக சுகாதார அமைப்புடன் இணைந்து பணியாற்ற 75 நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. அதே சமயம், வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள 90 நாடுகளுடன் சேர்ந்து வைரஸ் பரிசோதனைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள் ளது. சீனா தேசிய மருந்தகக் குழுமத்துக்குச் சொந்தமான “சைனோஃபாமின்” என்ற நிறுவனத்தின் ஒரு பிரிவு தமது ஆராய்ச்சியினால் மேம்படுத்தி வரும் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை வரும் டிசம்பர் மாத இறுதியில் விற்பனைக்கு விடவுள்ளனர். அவர்கள் கண்டு பிடிப்பும் சந்தைக்கு வரும்போது அமெரிக்கா என்ன சொல்லப்போகிறது? உலகமெங்கும் தயாரிக்கப்படும் மருந்து மற்றும் உணவுவகைகளை மக்கள் பாவைக்கு உகந்தது என்று அங்கீகரிப்பது, தரச் சான்றிதழ் வழங்குவதற்கென்று எஃப்.டி.ஏ - FDA அதாவது FOOD & DRUG ADMINISTRATION அல்லது உணவு மற்றும் மருந்து நிர்வாகம் என்ற ஒரு அமைப்பு செயற்படுகிறது. அமெரிக்காவில் சுகாதார மற்றும் மனித சேவைகள் துறை (HHS) இன் கீழ் செயல்படும் இந்த அரசு நிறுவனம் மருத்துவ தயாரிப்புகள், உணவு, மக்கள் மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவம் போன்றவற்றில், உலகளாவிய ஒழுங்குமுறை சார்ந்த நடவடிக்கைகளையும், அவற்றின் மீதான கொள்கைகளையும் ஒழுங்குபடுத்துகிறது. எனவே அந்த நிவுனத்தின் அங்கீகாரத்துடனே யேதான் மற்றைய நாடுகளின் கண்டுபிடிப்புகளைப் பொதுச் சந்தையில் விடுவதென்பது கேள்விக்குரிய விடயம். ஏனெனில் இந்த நிறுவனம் அமெரிக்க அரசு சார் நிறுவனமாக இருப்பதால் , அமெரிக்காவின் நலன்களுக்கு அப்பால் செயற்படுவது என்பது நடக்கக் கூடிய விடயமா? சற்றுச் சிந்திக்க வேண்டிய விடயமே!

சீன தேசத்தில் நடைபெறும் தடுப்பு மருந்துக் கண்டுபடிப்பு முயற்சியைப் பார்த்தால் தொடக்கியவனே முடிக்கப்பார்க்கிறானோ தெரியவில்லை என்று தான் எண்ணத் தோன்றும். தொடக்கத்தில் தான் முடியவேண்டும் என்பது நியதியாகலாம். ஆனால் அவர்களின் தொடக்கம் வியாபாரம் என்று அமெரிக்க சொல்லியிருக்கிறது. எனவே அவர்களின் தடுப்பு மருந்தைக் கண்டுபிடிப்பதென்ற முயற்சி அவர்கள் வியாபார உத்தியை வெற்றிபெறச் செய்கிறதா? ரஷ்யா போன்று சீனாவும் அமெரிக்காவுக்கு எதிரானவர்கள். அதுவும் கொரோனா விடயத்தில் இவர்கள் மிகவும் எதிரும், புதிருமாக இருப்பவர்கள். எனவே சீனாவின் கண்டுபிடிப்பை அமெரிக்கா எப்படி எதிர்கொள்ளப்போகிறது? தரத்தைப் பற்றித்தான் சொல்லுகிறோம். அதே சமயம் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனமொன்று பசை போன்றதொரு தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ளது. எனவே கொரோனாவைக் கட்டுப்படுத்தி, மனித அழிவை இல்லாதொழித்து ஒரு சுபீட்சத்தை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் வல்லரசுகளிடையே காண்பது அரிதாக இருக்கிறது. அவர்கள் எப்பொழுதும் வியாபாரச் சிந்தனை யோடு செயற்படுவதாகத் தெரிகிறது.

எனவே தற்பொழுது தடுப்பு மருந்து கண்டுபிடிப்பதென்ற விடயமும் வல்லரசுகளின் போட்டிக்குச் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றதொரு விடயமாகக் காணப்படுகிறது. வல்லரசுகளின் இவ்விதமான போட்டி களில் அதிக பாதிப்பை எதிர்கொள்ளப் போவது மத்தியதர மற்றும் வறுமைக்குப்பட்ட நாடுகளே !

வல்லரசு நாடுகளுக்கிடையிலான போட்டியினால், தரமற்ற உற்பத்தி சந்தைக்கு வருமாயின் அந்த நாடுகளைச் சேர்ந்த மக்களே அதிகம் அனர்த்தத்தை எதிர்கொள்வர். தற்போது அந்த நாடுகளின் அறிவித்தலைப் பார்த்தால் அந்த மருந்தைச் சில ஆயிரம் விலைகொடுத்துத்தான் வாங்க வேண்டிவரும். அந்த ஆயிரங்களைக் கொடுத்துப் பலனின்றிப் போனால்..?

பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
தீபம்
23.08.2020 தீபம் – 239
இணையப் பதிப்பு

## போதைப் பொருள் பரம்பல் – பேதைகளாகும் இளைஞர்

கடந்த சனிக்கிழமையன்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரபலமான பாடசாலையில் கல்வி கற்கும் நான்கு மாணவர்கள் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சியில் நடந்த இச் சம்பவம் ஒரு பத்திரிகையின் பிரதான தலைப்புச் செய்தியாக மறுதினம் வெளிவந்திருப்பதே அதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

நமது இளைய தலைமுறைகள் என்ன செய்கிறார்கள்? நாம் எங்கே நிற்கிறோம்? நாடு எங்கே போகிறது? என்ற கேள்விகளே, இந்தச் செய்தியை படிக்கும் போது அடிமனதின் ஆழத்தில் இருந்து அனல் மூச்சுடன் வெளிவருகிறது. அன்றாடம் நமது ஊடகங்கள் அனைத்தும் மயக்கத்தையும், அச்சத்தையும், பீதியையும் மட்டுமல்ல, எரிச்சலையும், வெறுப்பையும் தரும் செய்திகளையே பரபரப்புச் செய்திகளாக மட்டுமல்ல, பயமூட்டும் செய்திகளாகவும் வெளியிட்டு வருகின்றன!

- கேரள கஞ்சாவுடன் குடும்பப் பெண் கைது.
- கடலில் மிதந்து வந்த கேரளக் கஞ்சா மூடைகள்
- கஞ்சா பீடிகளுடன் இளைஞன் கைது
- கட்டுநாயக்காவில் கைப்பற்றப்பட்டது “குஷ்“ கஞ்சா
- ஹெரோயின் போதை மருந்துடன் தம்பதியர் கைது

இவ்வாறான செய்திகள் இல்லாத பத்திரிகைகளோ அல்லது ஊடகமோ கிடையாது என்றால்.. இந்தப் போதைப் பொருள் பரவலாக்கத்தின் பின்னணியில் இருந்து அதன் பரம்பலை முகாமைத்துவம் செய்யும் பெரும் சக்தி எது? இத்தனை கோடிக்கணக்கான ரூபாய்களை இந்தப் போதைப்பொருள் வர்த்தகத்தில் புரள விடும் அந்த மகா - கோடீஸ்வரச் சக்தி எது.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு சின்னஞ்சிறு தீவாகிய இலங்கையில், உலகின் அதிசக்தி வாய்ந்த இயக்கமென வர்ணிக்கப்பட்ட விடுதலைப்புலிகளை வெற்றி கொண்ட பெரும் வல்லமை படைத்த படை பலத்தை கொண்டுள்ளதாக மார்தட்டிக் கொள்ளும் ஒரு அரசால், வெறுமனே 400 வரையிலான வலையமைப்புகளைக் கொண்டதாக போதை வஸ்து தடுப்புப்பிரிவினரால் கூறப்படும் மிக சொற்ப அளவிலான கடத்தல் புள்ளிகளை மட்டும் கொண்டதாக நம்பப்படும் ஒரு அமைப்பை, இதுநாள் வரை கண்டுபிடிக்கவோ, கைது செய்து தண்டனை வழங்கவோ ஏன் முடியாதுள்ளது என்ற மக்கள் மனதில் எழும் கேள்விக்கு விடை சொல்லக்கூடியவர் எவரும் இல்லையா? இங்கேதான் சமூகப் பொறுப்புள்ள பல்துறை சார்ந்த, மனித நேயர்களின் மௌனமானது ஏராளமான சந்தேகங்களை எழுப்புகிறது.

போதைப்பொருளைப் பாவிக்கும் சாதாரண மட்டத்தில் உள்ள மனிதர்கள், இளைஞர்கள், சிறுசிறு போதைப்பொருள் விநியோக முகவர்கள், பிடிபடுகிறார்கள், கைதாகி சிறையில் வைக்கப்படுகிறார்கள். பின்னர் எப்படியோ விடுதலையாகியும் விடுகிறார்கள். சில நாட்களில் மீண்டும் அவர்கள் பழைய தொழிலையே இயல்பாகச் செய்யவும் ஆரம்பித்து விடுகிறார்கள். ஆனால், அந்தத் தலைமறைவுப் பெரும்புள்ளிகள் பிடிபடுவதே இல்லை, அந்த அதிமோசமான சமூக மற்றும் தேச விரோதிகள் எப்படித் தப்பித்து விடுகிறார்கள்?

அவர்கள் பெரும்புள்ளிகள் என்பதாலா? அவர்களைப் பாதுகாப்பாகத் தொடர்ந்தும் இயங்க அனுமதிப்பவர்கள், அந்த கடத்தல் வல்லோர்களிடம் இருந்து பெறும் அநுகூலங்களுக்காக எல்லாவற்றையும் கண்டும் காணாமல் விட்டு விடுகிறார்களா? இவை மக்களிடமுள்ள நியாயமான சந்தேகங்களேயாகும்.

எதுவானாலும் போதைப்பொருளுக்கு மக்கள் குறிப்பாக இளைய தலைமுறையினர் அடிமையாகமல் பாதுகாக்க அரசால் ஏனோ இதுவரை முடியவில்லை என்பதே உண்மை.

போதைப்பொருளால் பேதைகள் தான் நாட்டில் உருவாவார்கள்… மேதைகள் அல்ல… இது வெறுமனே தேசியப் பிரச்சினைமட்டுமல்ல, சர்வதேச பிரச்சினையுங் கூட… மக்கள் விழிப்பா இருந்தால் மட்டுமே விமோசனமுண்டு…

## முள்ளிவாய்க்கால் சத்தியப்பிரமாணம் குறித்து பேரினவாதிகள் அச்சப்படுவது ஏன்?



கடந்த தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ் தேசியத்தின்பால் உணர்வு கொண்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற அமர்வுக்குச் செல்ல முன் , முள்ளிவாய்க்காலுக்குச் சென்று, அம்மண்ணில் நின்று, சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டு சென்றதைச் சிலர் தவறாகப் புரிந்துகொண்டும், அது பற்றி உண்மைக்குப் புறம்பாகவும் பேசிவருகிறார்கள். அது மட்டமல்ல அதனை ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகப்பேசி, அதனை இன முரண்பாடாக மாற்ற முயற்சித்தும் வருவது, இனங்களுக்கிடையே நல்லெண்ணத்தை உருவாக்க நினைக்கும் சக்திகளுக்கு மனவருத்தத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

மக்களுக்காகப் பணி செய்யவென்று, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், மாபெரும் நம்பிக்கையுடனும், ஏராளக் கனவுகளுடனும் வாழ்ந்த மக்கள் , கொல்லப்பட்ட மண்ணின்மீது நின்று கொண்டு, எதிர்காலத் தலைமுறைக்காக உழைப்போம் என்றும், இறந்தோரின் கனவுகளை நனவாக்குவோம் என்றும் உறுதி எடுத்துக் கொள்வதில் தவறிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

ஆனால், எப்படி நியாயப்படுத்தினாலும், முள்ளிவாய்க்கால் படுகொலைக்குக் காரணமானவர்களால். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்பது வெளிப்படை. “முள்ளிவாய்க்கால்” என்ற சொல்லைக் கேட்கும்போது அது தொடர்பாகக் குற்ற உணர்வு உள்ளவர்களுக்குப் பழைய ஞாபகமே ஏற்படும். எனவே அந்தச் சொல் சாதாரண செய்தியில் வரும்போது கூட அவர்கள் அச்சப்படுவதற்கு ஞாயமுண்டு.

ஒரு இனம் தனக்காக உழைத்தவர்களையோ,மரணித்தவர்களையோ தாம் விரும்பிய இடத்திலிருந்து நினைவு கூரவும், அஞ்சலிக்கவும் முடியாதென்றால், அந்த நாட்டில் ஜனநாயகம் இறந்துவிட்டதென்பதே அர்த்தமாகும். எனவே அன்று முள்ளிவாய்க்கால் சென்று சத்தியப்பிரமாணம் எடுத்தவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் ஒருவர் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இதனைப் பார்க்கும்போது இந்த நாட்டின் எதிர்கால அமைதி குறித்த நம்பிக்கை கேள்விக் குறியாகி விடுகிறது.

அந்த இராஜாங்க அமைச்சர் வேறு யாருமல்ல, அவர் ஒரு முன்னாள் படை அதிகாரியும், முள்ளிவாய்க்கால் இறுதிப்போரின்போது போர் முனையில் பணியாற்றியவர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. எனவே அவர் “முள்ளிவாய்க்கால்” என்ற சொல்லைக் கேட்கும்போது பழைய ஞாபகம் ஏற்பட்டுப் பதட்டமடைவதில் நியாயமுண்டு.



- கம்சன் -

# 400 ஆவது ஆண்டு நிறைவு

# யாழ்ப்பாண நகரத்தின் வரலாற்றுச் சுவடுகள்



யாழ்ப்பாணக் கட்டளையகத்துள் அடங்கும் பகுதிகளைக் காட்டும் நிலப்படம்


## ஒல்லாந்தக் கட்டளை அதிகாரிகளும், அவர்களது வழிகாட்டற் குறிப்புக்களும்–1

இ. மயூரநாதன்

1658 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் இருந்த ஒல்லாந்தரின் ஆட்சி ஆட்சிப் பிரதேசம், கொழும்பு, யாழ்ப்பாணம், காலி எனும் மூன்று பகுதிகளாக நிர்வாகம் செய்யப்பட்டன. மூன்றுக்கும் பொறுப்பான ஆளுனர் கொழும்பில் இருந்தார். யாழ்ப்பாணத்திலும், காலியிலும் கட்டளை அதிகாரிகளின் (உழுஅயனெநரசள) கீழ் நிர்வாகம் நடைபெற்றது. யாழ்ப்பாணக் கட்டளை அதிகாரியின் கீழ் யாழ்ப்பாணக் குடாநாடு, தீவுப்பகுதிகள் என்பவற்றுடன், வன்னிப் பகுதியும் அடங்கியிருந்தது. கட்டளை அதிகாரிகள் சராசரியாக 3 முதல் 4 ஆண்டுகள் வரை பதவியில் இருந்ததாகத் தெரிகின்றது. இதனால், யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் ஆட்சி நிலவிய 138 ஆண்டுகளில் 30 தொடக்கம் 40 வரையான கட்டளை அதிகாரிகள் யாழ்ப்பாணத்திலிருந்து நிர்வாகம் செய்திருப்பர். ஆனாலும், இவர்களில் மிகச் சிலர் தொடர்பான தகவல்களே நமக்குக் கிடைக்கின்றன. இவர்களுள் அந்தனி பவிலியோன் (1658-1665), லோரன்ஸ் பைல் (1676-1680), புளோரிஸ் புளும் (1689-1694), ஹென்றிக் சுவார்டெக்குரூன் (1694-1697), ஆர்னோல்ட் மோல் (1723-1725), லிப்ரெக்ட் ஹூர்மன் (????-1748), யேக்கப் டி யொங் (1748-1752), அந்தனி மூயார்ட் (1763-1766) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

கட்டளை அதிகாரிகள் மாற்றலாகிச் செல்லும்போதோ, ஓய்வு பெறும்போதோ தமக்குப் பின் கட்டளை அதிகாரியாகப் பொறுப்பேற்பவருக்கு உதவியாக வழிகாட்டற் குறிப்புக்களை (அநஅழசைள) விட்டுச் செல்வது வழக்கம். சிலவேளைகளில், கட்டளை அதிகாரிகள் நீண்ட காலச் சிறப்புப் பணிகளுக்காக அழைக்கப்பட்டு தமது பகுதிகளுக்கு வெளியே செல்லும்போதும் இவ்வாறான குறிப்புக்களை எழுதுவது உண்டு. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இவ்வாறான மிகச் சில வழிகாட்டற் குறிப்புக்களே எஞ்சியுள்ளன. மேலே குறிப்பிட்டுள்ள கட்டளை அதிகாரிகளுள், அந்தனி பவிலியோன், லோரன்ஸ் பைல், ஹென்றிக் சுவார்டெக்குரூன், லிப்ரெக்ட் ஹூர்மன், அந்தனி மூயார்ட் ஆகியோர் எழுதிய வழிகாட்டற் குறிப்புக்கள் கிடைத்துள்ளன. இலங்கை ஆவணக் காப்பகத்தினர், காலத்துக்குக் காலம் இவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர்.

அந்தனி பவிலியோனே யாழ்ப்பாணத்தின் முதல் கட்டளை அதிகாரி. அதனால், இவர் பதவியேற்றபோது, அக்காலத்தில் இலங்கையின் ஆளுனராகப் பணியாற்றிய மூத்த வான் கோயென்ஸ், யாழ்ப்பாணக் கட்டளை அதிகாரியாகப் புதிதாகப் பதவியேற்ற பவ்லியோனுக்கு எழுதிய அறிவுறுத்தற் குறிப்புக்களும், யாழ்ப்பாணத்தின் பல்வேறு நிலைமைகள், ஒல்லாந்தர் கொள்கைகள், நிர்வாகம் என்பன தொடர்பில் பல முக்கியமான தகவல்களைக் கொண்டுள்ளன. இந்த அறிவுறுத்தற் குறிப்புக்களில் யாழ்ப்பாண ஆட்சிப்பகுதி நான்கு முக்கியமான பிரிவுகளையும் (வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி), மக்கள் வாழும் 8 தீவுகளையும், மக்கள் வாழாத ஐந்து தீவுகளையும் கொண்டது எனக் குறிப்பிடும் வான் கோயென்ஸ், முன்னர் யாழ்ப்பாண அரசர்களுக்குத் திறை செலுத்திவந்த வன்னிப் பகுதியும் யாழ்ப்பாணக் கட்டளையகத்தில் அடங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிட்ட பிரிவுகளின் எல்லைகள் குறித்தும் அவர் விபரமாக விளக்கியுள்ளார்.



Memoirs and Instructions of Dutch Governors, Commandeurs, &c.

INSTRUCTIONS

FROM

THE GOVERNOR-GENERAL AND COUNCIL OF INDIA

TO

THE GOVERNOR OF CEYLON,

1656–1665.

*To which is appended the Memoir left by Anthony Pavilljoen, Commandeur of Jaffnapatam, to his Successor, in 1665.*

*Translated by* SOPHIA PIETERS, *Dutch Translator.*

*With an Introduction and Notes by the Government Archivist.*

COLOMBO:
H. C. COTTLE, GOVERNMENT PRINTER, CEYLON.


1908.

மூத்த வான் கோயென்ஸ் எழுதிய அறிவுறுத்தல்களின் தொகுப்பு

இது தவிர யாழ்ப்பாணத்தின் வருமானம், அதிகாரிகள் நியமனம், பாதுகாப்பு நிலவரம், வன்னித் தலைவர்களைக் கையாளுதல், நெசவுத் தொழில் மேம்பாடு போன்ற பல்வேறு விடயங்களும் இவருடைய குறிப்பில் எடுத்தாளப்பட்டுள்ளன. ஒல்லாந்த இந்தியாவின் ஆளுனர் நாயகம் இலங்கை ஆளுனருக்கும் பிற அதிகாரிகளுக்கும் எழுதிய அறிவுறுத்தல்கள் அடங்கிய தொகுப்பின் ஒரு பகுதியாக இந்த அறிவுறுத்தல் குறிப்பும் அடங்கியுள்ளது. வான் கோயென்ஸ், யாழ்ப்பாணக் கட்டளை அதிகாரி பவ்லியோனுக்கு எழுதிய இரண்டு குறிப்புக்கள் இத்தொகுப்பில் உள்ளன. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு 1908 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. பவ்லியோன் ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் வரை பதவியில் இருந்ததாகத் தெரிகின்றது. கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்கும், அது தொடர்பான கல்வி முயற்சிகளுக்கும், பிற சமயங்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்துவதிலும் பவிலியோன் தனக்கு உறுதுணையாக இருந்ததாக பல்தேயஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். 1665 ஆம் ஆண்டில் பவ்லியோன் உயர் பதவியொன்றை ஏற்றுக்கொள்வதற் காக இந்தியாவுக்குச் சென்றார். இவர் யாழ்ப்பாணக் கட்டளை அதிகாரி பதவியிலிருந்து விலகியபோது எழுதிய வழிகாட்டற் குறிப்பு இந்த வகை ஆவணங்களிற் காலத்தால் முந்தியது. இதனால், யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் ஆட்சியின் தொடக்க கால நடவடிக்கைகள் குறித்து அறிந்துகொள்வதற்கு இது முக்கியமான ஆவணமாக விளங்குகின்றது. இந்த வழிகாட்டல் குறிப்பும் மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்கள் அடங்கிய தொகுதியில் பின்னிணைப்பாக உள்ளது.

லோரன்ஸ் பைல் 1676 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கட்டளை அதிகாரியாகப் பதவியேற்றார். 1679 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையின் ஆளுனராகப் பதவி உயர்வு பெற்று கொழும்புக்குச் சென்றார். ஏறத்தாழப் பதின்மூன்று ஆண்டுகள் அவர் அப்பதவியில் இருந்தார். பைல் யாழ்ப்பாணக் கட்டளை அதிகாரி பதவியில் இருந்து விலகியபோது, புதிய கட்டளை அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாத நிலையில் யாழ்ப்பாணத்தில் திசாவையாக இருந்தவரிடமும், யாழ்ப்பாண அரசியல் அவையிடமும் தனது பொறுப்புக்களை ஒப்படைத்தார். இவர்களுக்கு யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் பல்வேறு விடயங்கள் குறித்து ஏற்கெனவே தெரிந்திருந்ததால், இவர் ஒரு சுருக்கமான வழிகாட்டல் குறிப்பையே எழுதினார். எனினும், இவரது சுருக்கமான குறிப்பிலிருந்தும் பல முக்கியமான தகவல்களைப் பெற முடிகின்றது. இந்த ஆவணத்தின் மொழிபெயர்ப்பு, ரைக்கிளோவ் வான் கோயென்ஸ் (இளைய), யாழ்ப்பாணக் கட்டளை அதிகாரி லோரன்ஸ் பைலுக்கு எழுதிய அறிவுறுத்தல்களின் பின்னிணைப்பாக 1910 ஆம் ஆண்டில் வெளியானது.

ஹென்றிக் சுவார்டெக்குரூன் நெதர்லாந்தின் ரொட்டர்டாமைச் சேர்ந்தவர். பிரபுத்துவக் குடும்பத்தில் பிறந்த இவர் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியின் படையில் சேர்ந்து பத்தேவியாவுக்குச் சென்றார். அங்கே சிவில் சேவையில் சேர்ந்து பல்வேறு படிநிலைகளிற் பணியாற்றி வேகமாக முன்னேறினார். 1694 ஆம் ஆண்டு இவர் கட்டளை அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணத்துக்கு வந்தார். 1697 இல் இந்தியாவுக்கு அழைக்கப்பட்ட இவர் பல்வேறு உயர் பதவிகளை வகித்து 1718 ஆம் ஆண்டில் ஒல்லாந்த இந்தியாவின் ஆளுனர் நாயகம் ஆனார். 1724 ஆம் ஆண்டுவரை இப்பதவியை வகித்த சுவார்டெக்குரூன் ஓய்வுபெற்றுக்கொண்டு தனது இறுதிக் காலத்தைப் பத்தேவியாவில் கழித்தார். யாழ்ப்பாணத்துக் கட்டளை அதிகாரிகளின் வழிகாட்டற் குறிப்புக்களில் சுவார்டெக்குரூனின் குறிப்பு மிகவும் பெறுமதி வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இதுபோன்ற பிறவற்றோடு ஒப்பிடும்போது, யாழ்ப்பாணக் கட்டளையகம் தொடர்பில் மிகவும் விரிவானதும், முக்கியமான பல தகவல்களைக் கொண்டதுமான ஆவணமாக இது விளங்குகின்றது. இதற்குப் பிந்திய ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் முழுவதிலும் அதிகாரிகள் இவ்வழிகாட்டற் குறிப்பை உசாத்துணையாகவும், மேற்கோள் காட்டுவதற்கும் பயன்படுத்தியுள்ளனர் என்பது இதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு 1911 ஆம் ஆண்டில் வெளியானது.



Memoirs and Instructions of Dutch Governors, Commandeurs, &c.

MEMOIR

OF

HENDRICK ZWAARDECROON,

COMMANDEUR OF JAFFNAPATAM,

THE COUNCIL OF JAFFNAPATAM, DURING HIS ABSENCE AT THE COAST OF MALABAR.

COLOMBO:
H. C. COTTLE, GOVERNMENT PRINTER, CEYLON.

1911.

என்றிக் சுவார்டெக்குரூனின் வழிகாட்டற் குறிப்பு

சுவடுகள் தொடரும்...



# லெபனானின் குண்டுவெடிப்பும் இஸ்ரேலின் பிராந்திய இருப்பும்

கலாநிதி கே.ரி. கணேசலிங்கம்

லெபனான் குண்டுத்தாக்குதல் அந்நாட்டின் அரசியலில் பாரியநெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி உலகநாடுகளின் மத்தியிலும் அத்தாக்குதல் அதிக சந்தேகத்தினையும் நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம். வெளிப்படையாகப் பார்த்தால் சாதாரணவிடயமாக அக்குண்டு வெடிப்புக் காணப்பட்டாலும், லெபனானின் பொருளாதாரத்தையும், ஆட்சித்துறையையும் அதிகமானதாக்குதலுக்குத் தள்ளியுள்ளது. அதனால் ஏற்பட்ட ஒரு விடயமாகவே அந்நாட்டுப் பிரதமர் பதவிவிலகியுள்ளார். அதனால் லெபலான் குண்டுவெடிப்பு உள்நாட்டிலும்,பிராந்திய சர்வதேச மட்டத்திலும் அதிர்ச்சிகரமான சூழலை ஏற்படுத்தியுள்ளது. இக்குண்டுவெடிப்பு நிகழ்ந்ததுக்கு பின்னால் காணப்படும் அரசியல் ரீதியான முக்கியத்துவத்தினைத் தேடுவதாக இக்கட்டுரை அமைய உள்ளது.

வெளிப்படையாக,பெய்ரூட்நகரில் அமைந்துள்ள இத் துறைமுகத்தில் களஞ்சியப்படுத்தியிருந்த 2500 தொன்க்கு மேற்பட்ட அமோனியா நைத்திரற்றினால் ஏற்பட்ட வெடிப்பின் பிரதிபலிப்பு என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வெடிப்புத் தொடர்பில் ஏற்கனவே எச்சரிக்கை செய்யப்பட்டது என்றும், அதனை ஆட்சியிலிருந்த அரசாங்கம் கவனம் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது. ஏறக்குறைய இத்தாக்குதலில் 170க்கும்மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காணாமலாக்கப்பட்டுள்ளதோடு, 6000க்கும்மேற்பட்டோர் காயப்பட்டுள்ளனர். குண்டுவெடிப்பு நிகழ்ந்ததிலிருந்து 200கி.மீ தூரத்துக்கு அழிவுகள் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. குறிப்பாக அரசாங்கத்தின் அசமந்தபோக்கும், இராணுவத்தின் திட்டமிடலின் பலவீனம் போன்ற முக்கியமான பல காரணங்கள் வெடிப்பு ஏற்பட வழிவகுத்துள்ளது என்று தெரியவருகிறது. இதுமட்டுமன்றி வெடிப்பிற்கு பின்னரான சூழலில் லெபனான் நீதித்துறையின் பலவீனமான அணுகு முறையினால் பிரான்ஸ் உட்படப் பல ஐரோப்பிய நாடுகள் சர்வதேச விசாரணைக்கு அழைப்புவிட்டுள்ளன.

இவ்வாறு,லெபனான் ஆட்சித்துறையில்,அதன் இராணுவக்கட்டமைப்பில் பலவீனங்களை முன்வைத்தாலும், இதனைக் கடந்து வேறு பல அம்சங்களும் இவ்வெடிப்போடு தொடர்புற வாய்ப்புள்ளதென விளங்கிக் கொள்ளமுடியும். அதாவது லெபனானின் எல்லை யோரத்தில் அமைந்துள்ள இஸ்ரேல் 1947ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இப்பிராந்தியத்தில் அதிக அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக ஈரான் மீதும் அதன் அணுவாயுதப் பரிசோதனை நிலையங்கள் மீதும் கொரோனா அச்சுறுத்தல் வலுப்பெற்ற சூழலிலும் பாரிய நெருக்கடி நிகழ்த்தியமைகளுக்கும் இஸ்ரேல் மீதே ஈரான் குற்றம் சாட்டியது. அக் குற்றச்சாட்டுக்கு வலுவான காரணம் 2007ஆம் ஆண்டு ஈரானின் அணு உலைமீது தாமே தாக்குதல் நடத்தியது என இஸ்ரேலே பிரகடனப்படுத்தியது. அவ்வகையில் அவதானிக்கும் போது லெபனானின் குண்டு வெடிப்பின் பின்னால் இஸ்ரேல் இராணுவத்திற்கும் பங்கும் இருக்கலாம் என கருதப்படுகிறது.

லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலுக்கு எதிராகப் பல தடவை தீவிரவாதத் தாக்குதல்கள் மேற்கொண்டுள்ளன. அவ்வகைத் தாக்குதல் தவிர்க்க முடியாது இஸ்ரேல் இருப்பினையும்,அதன் பாதுகாப்பினையும்,யூதர்களின் உயிர்வாழ்வையும் பாதிப்பதாக அமைந்துள்ளது. இது மட்டுமன்றி யூதர்கள் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதற்கும் பாதுகாப்போடு செயற்படவும் வெபனானின் எல்லை யோரத்தில் குடியேற்றப்பட்டிருக்கும் யூதர்களின் நலன்களைப் பாதுகாத்தல் என்பது அவசியமானது ஒன்றாக விளங்குகிகின்றது. இதனாலேயே லெபனானில் அதன் உள்நாட்டுக் கட்டமைப்புக்குள்ளேயே தகர்த்தெறியும் உத்தியை நிகழ்த்தியிருக்கலாம் என எண்ணப்படுகிறது. இவ்வாறே 2010ஆம் ஆண்டு பாரிய குண்டொன்று வெடித்துப் பொருளாதார நெருக்கடிக்குள் லெபனான் தள்ளப்பட்டது.

அதுமட்டுமன்றி இஸ்ரேல் தனது நட்பு நாடான அமெரிக்காவின் ஒத்துழைப்பும் பலமும் மட்டுப்படுத்தப் படுகிறது எனக் கருதுவதால் பிராந்தியங்களிடையே அச்சுறுத்தலுக்கூடாகத் தனது இருப்பை உறுதிப்படுத்த முயலுகிறது. ஆனால் இஸ்ரேல் அணுகுமுறை அமெரிக்க சார்ந்தும்,அத்துடன் சீனா,வடகொரியா, ரஸ்சிய, சிரியா சார்ந்தும் உருவாகிஉள்ளது.

காரணம்,அமெரிக்காவுடைய நட்பும், இஸ்ரேலின் விருப்புக்கு இயங்கும் குடியரசுக்கட்சியின் தேர்தல் நெருக்கடி இஸ்ரேலுக்கு ஒரு எச்சரிக்கையை ஏற்படுத்தியுள்ளது. நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்கத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வெற்றி பெறும் பட்சத்தில், ஒபாமாவின் கொள்கைகள் பின்பற்றப்படும் நிலை ஏற்படும். அப்போது இஸ்ரேல் உள்ளார்ந்த ரீதியிலும் பிராந்திய சர்வதேசத்திலும் அதிக நெருக்கடியை எதிர்கொள்ளலாம். ஆதனைக் கருத்திற்கொண்டே முன் கூட்டியே சில நகர்வுகளை இஸ்ரேல் மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டது. அதன் ஓர் அம்சமே லெபனான் குண்டுவெடிப்பு. அதன் இரண்டாம் அம்சமாகவே கடந்த ஆகஸ்ட் 13இல் ஐக்கிய அரபு எமிரட் உடன் இஸ்ரேல் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கை காணப்படுகிறது. இதனுடன் ஈரானின் அணுவாயுதத்தை ஆரம்ப கட்டத்தில் அழித்துவிட இஸ்ரேல் மேற்கொண்ட முயற்சிகள் முழுமை பெறாததும் இன்னொரு பிரதான காரணமாகும். எனவே லெபனான் குண்டுவெடிப்புக்குப் பின்னால் இத்தகைய காரணியொன்று வலுவான அம்சமாக இருப்பதற்கு வாய்ப்புண்டு.

இவ்வாறே லெபனானின் துறைமுகத்தில் ஏற்பட்ட வெடிப்புக்கு ரஸ்சியாவின் போர்க் கப்பல்தான் காரணம் என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது. குறிப்பாக வட ஆபிரிக்க நாடுகளுக்கு ஆயுதங்களை ஏற்றி வந்த கப்பலொன்று லெபனான் துறைமுகத்தில் தரித்து நின்றது என்றும், அதற்கான காரணம் உக்ரன் ரஸ்சிய முரண்பாடு என்றும் அதாவது உக்ரன் மாலுமிகள் ரஸ்சிய கப்பலில் ஆயுதம் ஏற்றிவந்தது என்றும் இருநாட்டுக்கும் யுத்தம் ஏற்பட்டபோது லெபனானின் தரித்து விடப்பட்டது என்ற தகவலும் வெளியாகியுள்ளது. அத்தகைய ஆயுதக் கப்பல் லெபனான் துறைமுகத்தில் நீண்டகாலம் தரித்துநின்றது என அத்தகவல் மேலும் உறுதிப்படுத்துகிறது. எனவே ரஸ்சியக் கப்பலில் ஏற்பட்ட வெடிப்பே லெபனானில் பாரிய அழிவை ஏற்படுத்தியது எனவும் கருதப்படுகிறது.

எனவே லெபனான் குண்டுவெடிப்பு மேற்குறித்த சந்தேகங்களை அதிகம் கொண்டிருந்தாலும் பிராந்திய ரீதியில் இஸ்ரேல் பின்பற்றும் அணுகுமுறை அதிக முக்கியத்துவம் பெறுகிறது. ஒருபக்கம் அமெரிக்காவால் ஏற்படும் நெருக்கடி மறுபக்கம் சீனா,வடகொரியா, ரஸ்சிய, சிரியா என்பவற்றால் ஏற்படும் அச்சுறுத்தல் என்பவற்றுக்கிடையே தனது பாதுகாப்பையும் உறுதிப்பாட்டையும் நிலை நிறுத்திக்கொள்வதற்குச் சில உத்திகளை இஸ்ரேல் உருவாக்க ஆரம்பித்துள்ளது. கடந்த மூன்று மாதங்களாக ஈரானின் எல்லைக்குள் நிகழ்ந்த குண்டுவெடிப்புக்கள், ஏவுகணைத் தாக்குதல்,விண்ணுக்கு அனுப்பட்ட செயற்கைக்கோள் மூலம் ஈரான் தொடர்பில் திரட்டப்பட்ட தகவல்கள், ஐக்கிய அரபு எமிரட்ஸ் உடன் அண்மையில் இஸ்ரேல் மேற்கொண்ட சமதான ஒப்பந்தத்தையும் அவதானிக்கையிலும் இஸ்ரேல் தனது இருப்பை உறுதிப்படுத்த லெபனானனை அச்சுறுத்த



முயற்சித்திருக்கலாம். இதற்கு இன்னொரு உதாரணம் லெபனானின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சி பெற்றுள்ளது. ஜப்பானில் வீசப்பட்ட அணுகுண்டின் 1%10 பங்குபாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. செப்டெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்கா உலகநாடுகளில் முதன்மை பெற்றது போன்றே லெபனானும் மாறியுள்ளது. பிரான்ஸ், ஜேர்மன் உட்பட அனைத்து ஐரோப்பிய நாடுகளும் லெபனானுக்கு உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்க முன்வைந்துள்ளன. இதனால் லெபனானின் பெருளாதாரம் மாற்றம் ஏற்படுகின்றதோ இல்லையோ தெரியவில்லை. ஆனால் இவ்வெடிப்புச் சம்பவம் தெளிவான ஒரு அரசியல் இராணுவ உத்திகளோடு நிகழ்த்தப்பட்டது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இஸ்ரேல் தனது நலனை அதன் பிரதமர் குறிப்பிடுவது போல் பிராந்திய நாடுகளில் அமைதியின்மையால் இஸ்ரேல் அமைதியாக இருக்க முடியாது என்பதற்கான செயற்பாட்டையே முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது. அது தற்போது சவுதி அரேபியாவின் ஆகாய மார்க்கமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ/க்கு விமான சேவையை ஆரம்பித்துள்ளது. எனவே இஸ்ரேலின் பிராந்திய உறுதிப்பாடு பலமடைகிறது என்பதை மேற்படி நிகழ்வுகள் தெளிவாக உணர்த்துகிறது.

# தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமைக்கு வழி உண்டா ?

- மாசிலான் -

தமிழ் மக்கள் பேரவையும், யாழ்ப் பாணம் கல்வியாளர்கள் என்ற பெயரி லும் தமிழ்த் தேசியத்தில் பற்றுக்கொண்டவர் களை மக்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று அறிக்கை விட்டிருந்தனர். "யார் அந்தத் தமிழ்த் தேசியவாதிகள்?" என்று அவர்களால் கைகாட்ட முடியவில்லை. அவர்கள் யார் யாரை நினைத்துக் கூறினார் களோ என்றும் தெரியவில்லை. இப்பொழுது தேர்தல் முடிந்துவிட்டது.தேர்தல் காலத்தில் மட்டும் துயில் விட்டெழுந்து அறிக்கை விடும் இது போன்ற அமைப்புகள் இப்போது என்ன சொல்லப்போகிறார்கள்? அல்லது செய்யப் போகிறார்கள் ? என்று இதுவரை கூறாது இருக்கிறார்கள்.அடுத்த தேர்தல் வரை காத்திருக்கப் போகிறார்களா என்றும் தெரியவில்லை!!

தேர்தல் முடிவுகளின் படி தமிழ் மக்களின் வாக்குகள் சிதறியுள்ளதைக் காண முடிகிறது.ஆட்சிக்குத் துணையானவர்கள், ஒரு பக்கம் இருக்கிறார்கள். அவர்களை விட்டுவிட்டுப் பார்த்தால் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்று மூன்று பகுதியினர் நாடாளுமன்றம் சென்றுள்ளார்கள். இவர்கள் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் நலன் சார்ந்து ஒற்றுமையுடன் பயணிப்பார்களா? பயணிக்க வைக்க முடியுமா? என்ற வினாக்கள் எழுகின்றன. இவர்களின் ஒற்றுமை சாத்தியமா ?என்பதற்கான விடை என்பது இலகுவில் கிடைக்க மாட்டாது. கடந்த காலத்தையும் , இப்போதைய நிகழ்வுகளை யும் பார்த்தால் தான் விடையைக் காண முடியும்..

தமிழ் மக்கள் பிரிந்து நிற்கக் கூடாது, ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று 952 இல் இருந்தே கூறப்பட்டு வந்துள்ளது. இதற்கான ஒரு முயற்சி 1956 நாடாளு மன்றத் தேர்தலுக்கு முன்னர் எடுக்கப்பட்டது. உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த நீதியரசர் செ.நாகலிங்கம் கியூ.சி அவர்கள் தலைமையில் அம்முயற்சி அன்று எடுக்கப்பட்டது ஆனால் அது வெற்றி அளிக்கவில்லை.

இதன் பின்னர் ஒவ்வொரு தேர்தல் காலங் களிலும் ஒற்றுமைக் குரல்கள் அடிக்கடி கேட்கும். பின்னர் ஓய்ந்து விடும். 1970 இல் நடந்த பொதுத் தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான இடது முன்னணி அரசியலமைப்பை மாற்றுவதற்கான ஆணையைத் தருமாறு கோரித் தேர்தலைச் சந்தித்தது. அத்தேர்தலில் இடதுசாரி முன்னணி , மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் பெற்றுக்கொண்டது.இது தான் தமிழ் மக்களைக் கொஞ்சம் விழிப்படையச் செய்தது எனலாம்.மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற சிறிமாவோ அரசு "சிறிலங்கா ஒரு சிங்கள பௌத்த நாடு" என்றும் , சாதாரணச் சட்டமாக இருந்த சிங்களம் ஆட்சி மொழி என்ற விடயத்தை அரசியல் யாப்பின் மூலம் வலுவான நிலைக்குக் கொண்டு செல்லப்போகிறது என்றும், இதன் மூலம் தமிழ் மக்களை நிரந்தரமாக இரண்டாம் தரக் குடிமக்களாகாக்கும் செயலில் இறங்கியுள்ளார்கள் என்பதைத் தமிழ் மக்கள் உணரத் தொடங்கினர். இதனால் தமிழரசு, தமிழ்க்காங்கிரசு, சுயாட்சிக்கழகம், தமிழர் ஒற்றுமை முன்னணி என்பன இணைந்து தமிழர் கூட்டணி உருவானது. இக்கூட்டணி தமிழ் மக்களுக்கான உரிமைகள் பற்றிய தீர்மானங்களை எடுத்து அரசியல் யாக்க அவையில் வைக்குமாறு கூட்டணிக் கட்சிகளைக் கேட்டுக் கொண்டது. அதற்கமைய அத்தீர்மானங்கள் அரசியல் யாக்க அவையில் முன்மொழியப்பட்டு வழி மொழியப்பட்டன.இத்தீர்மானங்களில் ஒன்றைத் தானும் ஏற்றுக்கொள்ள அரசியல் யாக்க அவை மறுத்துவிட்டது. இதனைத் தொடர்ந்து அரசியல் யாக்க அவையில் தொடர்ந்து பங்குபற்றுவது வீணான வேலை என்று கூறிவிட்டு வெளியேறிவிட்டது. பின்னர் வட்டுக்கோட்டையில் கூடிய தமிழர் கூட்டணியானது தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாறி வரலாற்றில் மிக முக்கியமான "வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை" நிறைவேற்றியது. தந்தை செல்வா காங்கிரசுத் தலைவர் ஜி ஜி யைச் சென்று சந்தித்துத் தமிழ் மக்களின் ஒற்றுமைக்காக ஒன்றுபட வேண்டிய அவசியத்தை அவரிடம் கூறித் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவராக ஜி ஜி யையும் இணைத்து ஒற்றுமையைப் பலப்படுத்தினார். தலைவர்கள் இருவரும் அடுத்தடுத்துச் சாவடைந்த நிலையில், 1977 இல் நடந்த பொதுத் தேர்தலில், வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு ஆணை தருமாறு தமிழர் கூட்டணி தமிழ் மக்களிடம் கேட்டுக் கொண்டது. மக்களும் அதற்கு ஆணை வழங்கினர். இவ்வாறு தான் தமிழ் மக்களின் ஒற்றுமை கட்டி எழுப்பப்பட்டது. பின்னர் சில சில சலசப்புகள் இருந்தபோதும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒற்றுமையாகவே பயணித்தது. 1983 ஜூலை இனப்படுகொலை வரை இந்த ஒற்றுமை தொடர்ந் தது என்று கூறலாம். இடையில் ஏற்பட்ட ஒரு கருத்து மோதலை விட்டு விடலாம்.ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடுத்த கட்டம் கொஞ்சம் கசப்பானதாகவே இருந்தது. ஆயுதப் போராட்டத்தின் உச்சம் அரசியல் வாதி களைப் பின் தள்ளியதால் அந்த ஒற்றுமை பற்றிய தேவை என்பது தேவையற்றுப்போய் விட்டது. போராட்டம் தொடர்கின்ற நிலையில் நாடாளுமன்றத்தி லும் அதற்குச் சார்பான குரல் இருப்பது நல்லதென்ற ஒரு காரணத்தால் டெலோ ,ஈபிஆர்எல்எப்,ஆகிய முன்னாள் ஆயுதக் குழுக்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி , காங்கிரசு ஆகிய அரசியல் கட்சிகளையும் இணைத்து ஒரு அணி அமைக்கப்பட்டுத் தேர்தலைச் சந்திப்பதாக முடிவெடுக்கப்பட்டது. ஊடகவியலாளர் சிவராம் விடுதலைப் புலிகளின் ஒப்புதலுடன் இதனை முன்னிறுத்தி ஒற்றுமையை ஏற்படுத்தினார். அவர்கள் தேர்தலைச் சந்தித்துப் பெரிய வெற்றியை அடைந்தனர். பின்னர் ஆனந்தசங்கரிக்கும், கூட்டணிக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கினால் 2004 இல் நடந்த தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தில் முன்னர் போட்டியிட்ட தமிழ் மக்களின் கூட்டமைப்பு தமிழரசுக்கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி வழக்கு மன்றினால் முடக்கப்பட்டிருந்தது. சீராக இயங்கி வந்த கூட்டமைப்பு 2009 இல் போர் உச்சத்தில் இருந்தபொழுது தமிழ் மக்களுக்கான குரலாக ஒலிக்காது தனது குரலை அடக்கிக் கொண்டது. முள்ளிவாய்க்கால் பேரவலம் நடந்தபோது அதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தது கூட்டமைப்பு. இதன் பின்னர் கூட்டமைப்பு பிளவு கண்டது. ஆனாலும் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு தந்தை செல்வாவின் சின்னமான தமிழரசுக்கட்சியின்வீடு என்பன மக்கள் மனதில் நிறைந்துள்ளதால் கூட்டமைப்பு வெற்றியடைந்து வந்தது. ஆனால் அவ்வெற்றியானது மெது மெது வாகக். குறைந்து இருபத்திரண்டி லிருந்த ஆசனங்கள் இன்று பத்தாகி விட்டது. இவ்வாறு தேய்ந்து போனதற்கு என்ன காரணம், என்பதைக் கூட்டமைப் பினர் ஆழமாகச் சிந்திக்கவில்லை என்றே கூற முடியும். தமிழ்க் காங்கிரசுக்கு ஜிஜி தலைவராக இருந்தார். தமிழரசுக்கு தந்தை செல்வா தலைவராக இருந்தனர். தமிழரசுக்கட்சி வளர்ச்சி அடைந்த போது தந்தை செல்வா மக்களின் தலைவராக இருந்தாலும் கட்சிக்கு என்று மாநில மாநாடுகளில் தலைவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். கட்சியின் உத்தியோகத் தலைவர்களாக அவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்களே பதவி வகிப்பார்கள். இதெல்லாம் போய் கூட்டமைப்புக்கு ஒரு நிரந்தரத் தலைவராகச் சம்பந்தன் வந்தார். அது மட்டுமல்ல தமிழரசுக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலரும் ஓரம் கட்டப்பட்டனர். புதிதாக வந்த சுமந்திரன் கட்சியின் முன்னிலைக்கு வந்தார். அவர் எவ்வாறு கட்சிக்குள் வந்தார் என்பது தெரியாத நிலையில், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளே நுழைந்த சுமந்திரனை முன்னிளைப்படுத்தியவர்கள் யார்? சட்டம் படித்தவர், மும்மொழி தெரிந்தவர் என்பது முக்கியமா?கட்சிக்காக இரத்தம் வியர்வை சிந்தி உழைத்த சிற்றம்பலம் போன்ற பலர் முக்கியமா ? என்ற வினாவிற்கு இதுவரை விடை கிடைக்கவில்லை. இந்நிலையில் சட்டம் தெரிந்தவர் என்றால் கொழும்புக் கிளையின் தலைவராக இருக்கும் கே.வி. தவராசாவை முன்னிலைக்கு வராமல் தடுப்பது எது.? சம்பந்தன் சுமந்திரன் கூட்டு என்பது தான் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கொண்டதாக இருந்ததை எவரும் தட்டிக்கேட்கவில்லை. கூட்டமைப்பு என்பதன் முடிவுகள் இவர்களின் தீர்மானமாக இருந்ததால்தான் கூட்டமைப்புத் தேய்ந்து போனதற்குக் காரணமாகும். . இலங்கை நாடாளுமன்றத்தைச் சர்வதேச மேடையாகப் பயன்படுத்தவென வந்த கூட்டமைப்பு, சர்வதேச மேடையான ஜெனிவாவின் மனித உரிமைப்பேரவையை இலங்கை அரசைக் காப்பாற்றுவதற்காகப் பயன்படுத்தியதே தமிழ் மக்களின் வெறுப்புக்குக்காரணமாக அமைந்தது. அதேபோல் பல சர்வதேசச் சந்தர்ப்பங்களை இலங்கை அரசைக் காப்பாற்றும் விதத்திலேயே கூட்டமைப்புப் பயன்படுத்திக் கொண்டது. அயல் நாட்டின் நலனில் அக்கறை கொண்டு நடந்த கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலனில் சிறிது கூட அக்கறை காட்டவில்லை.இனப்படுகொலை என்று கூற முடியாது, அது வெறும் போர்க்குற்றம் என்று கூறிவிட்டு அதற்கான சர்வதேச விசாரணையும் முடிந்து விட்டது . அதுமட்டுமல்லாது " இதுவரை இவ்வளவு சிறப்பான விசாரணை என்றுமே நடைபெற்றிருக்கவில்லை," என்று கூறித் தமிழ் மக்களை ஏமாற்றியமை,புலிகளின் இனச்சுத்திகரிப்பு என்று கூறியமை,புலிகள் கட்டா ய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டார்கள் என்று கூறியமை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தை திறந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை மழுங்கடித்தமை, அரசைக் காப்பாற்றவும் விடுதலைப் புலிகளை மக்கள் மனதிலிருந்து நீக்கவும் செய்த பரப்புரைகள் என்று எல்லாவற்றையும் செய்துவிட்டு, தொடர்ந்தும் மக்களை ஏமாற்ற முடியாத நிலையைத் தோற்றுவித்ததே தேர்தல் தோல்விக்கான காரணமாகும்.





இப்பொழுது கூட்டமைப்புக்குள்ளும் பிரச்சினை,தமிழரசுக்குள்ளும் பிரச்சினை. தேர்தலில் தோல்வியடைந்த தமிழரசுக்கட்சியின் தலைவரை அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கட்சிக்குள் எப்படியோ நுழைந்த சுமந்திரனும் ஈபிஆர் எல் எப் மூலம் நுழைந்து பின்னர் தமிழரசுக்குள் நுழைந்த சிறிதரனும் இதில் அதிகம் ஆர்வம் காட்டினர். சிறிதரன் தான் தலைராகத் தயார் என்றும் அறிவித்திருந் தார். இதன் ஒரு கட்டமே தேசியப் பட்டியல் உறுப்பினர் தெரிவும் ஆகும். அதைச் சேனாதிராசா சமாளித்து விட்டார். இப்பொழுது கூட்டமைப்பின் உத்தியோகப் பேச்சாளர் யார்?கட்சிக் கொரடா யார் என்ற வினாக்கள் எழுந்துள்ளன.? இவற்றில் மாற்றத்தைக் கொண்டு வரச் சம்பந்தன் ஒப்புக்கொண்டுள்ளார் என்று தலைப்புச் செய்திகளும் கூறுகின்றன. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் கட்சிப் பேச்சாளர் தெரிவு என்பது வேறு நாடாளுமன்றக் குழுத் தலைவர், கட்சிக் கொரடாத் தெரிவு என்பன வேறு. ஆனால் பத்திரிகைகள் இரண்டையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பி வருகின்றன. நாடாளுமன்றத்திற்கு தெரிவான உறுப்பினர்கள் தங்களின் நாடாளுமன்றகுழுத் தலைவரையும், கொரடாவையும் தெரிவு செய்வார்கள். அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே இருப்பார்கள். ஆனால் பேச்சாளர் என்பவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும் என்பது மில்லை நாடாளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படுவது மில்லை. அதைக் கூட்டமைப்பின் கட்சிகளே தீர்மானிக்கும்.இந்நிலையில் கொரடாவை யும் பேச்சாளரையும் மாற்றுவதற்குச் சம்பந்தன் ஒப்புதல் கொடுத்துள்ளதாகவும் பின்னர் முடிவெடுப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.இதனைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். ஆனால் இப்பொழுது எவ்வாறு சிறிதரன் கொறடாவாக இருக்கிறார்? என்று கூற முடியும். அவரை யார் தெரிவு செய்தார்கள்? அப்படித் தெரிவு செய்யாமல் புதிய நாடாளு மன்றத்தில் அவர் கொறடாவாக இயங்க முடியாதே! இது என்ன மாயம்? அல்லது கூத்து என்று தெரியவில்லை? இதே நேரம் கூட்டமைப்பில் இவ்வாறான குழப்பங்கள் இருக்கும் நிலையில் தமிழரசுக்கட் சிக்குள் என்ன நடைபெறுகிறது என்றுமேலே குறிப்பிட்டிருந்தாலும் மேலும் சிலவற்றை இங்குகுறிப்பிட்டே ஆக வேண்டும். கட்சிக்குள் சுமந்திரன் தனது பலத்தை அதிகரித்துள்ள நிலையிலேயே சேனாதிராசாவை தலைவர் பதவியிலிருந்து நீக்க முனைகிறார். இதற்குச் சிறிதரனும் உடந்தையாக உள்ளார் என்றால் தலைவராக இருக்கும் சேனாதிராசா எவ்வாறு இயங்குகிறார்? தனது தலைவர் என்ற பதவியில் உறுதியுடன் நின்று கட்சியை முன்னெடுக்கத் தவறியுள்ளார் என்பதே உண்மையாகும். கட்சியின் விதிகளின் படி கட்சியின் மாநாடு, செயற்குழு, ,மத்தியகுழு போன்ற அனைத்துக் கூட்டங்களுக்கும் தலைமை வகிக்க வேண்டியவர் தலைவரே ஆகும். ஆனால் சேனாதிராசா அந்தக் கட்சியின் விதிக்கு அமைய நடக்காமல் செயற்குழு அல்லது மத்திய குழுக் கூட்டங்களுக்குச் சம்பந்தரைத் தலைமை ஏற்கவைப்பது ஏன்?தனக்கு அந்த ஆற்றல் இல்லை என்பதையல்லவா இது காட்டுகிறது. முன்பு எச்சந்தர்ப்பத்திலும் தந்தை செல்வா இவ்வாறு தலைமை ஏற்று நடந்ததில்லை.

ஆனால் சம்பந்தன் தானே அனைத்தும் என்று இவ்வாறு நடப்பதற்கு ஏன் சேனாதிராசா இடம் கொடுக்கிறார் என்பது அவர் தனது ஆளுமையில் நம்பிக்கை வைக்கவில்லை என்பதையே காட்டுகிறது.அது மட்டுமல்ல புலிநீக்க அரசியலையும் அவர் கண்டிக்கவில்லை, சர்வதேசத்தில் சுமந்திரன் ஆட்சிக்கு ஆதரவு எடுத்ததையும் கண்டிக்கவில்லை .இதனை அவரது பலவீனம் என்று தான் கருத முடியும். இது ஒருபுறம் இருக்க கூட்டமைப்பை இந்தியத் தூதுவர் சந்தித்துள்ளார்.அவர் "ஒற்றுமையாய் செயற்படுங்கள்" என்றும் கூறியிருக்கலாம் அத்துடன் பதின்மூன்றாவது திருத்தம் பற்றியும் உறுதி அளித்துள்ளதாகக் கூட்டமைப்புச் சொல்கிறது.ஆதலால் பதின்மூன்றுக்குள் ஏதாவது கிடைக்கும் என்று திருப்தி அடைகிறது,கூட்டமைப்பு.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் கூட்டமைப்புக்குள் குழப்பம், தமிழரசுக்கட்சிக்குள் குழப்பம் என்று இருக்கும்போது அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைப்பது என்பது சவாலான விடயமே. அத்துடன்சுமந்திரன் இந்தக் குழப்பத்தைப் பயன்படுத்தி மீண்டும் முன்னுக்கு வருவதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் ஒற்றுமை என்பது சாத்தியமாகுமா? மக்கள் தான் ஒற்றுமையாக ஓரணியின் பின்னல் திரள வேண்டும்.

"அதுவே ஒற்றுமைக்கான வழியாகும்."



# உலக்கை தேய்ந்து உளிப்பிழியானதோ!

## கூட்டமைப்புக்குள் உட்கட்சி முரண்பாடு !

- குருபார்வை -

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பிருந்தே ஆரம்பித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இடையேயான பனிப்போர் நாடாளு மன்றத் தேர்தலின் போது சூடுபிடிக்கத் தொடங்கி, தேர்தலில் அக்கட்சி சந்தித்த வரலாற்றுப் பின்னடைவுக்குப் பின்னர் கொதி நிலையைக் கடந்து ஆவியாதல் நிலைக்கு வந்துவிட்டதாக அமைப்புக் குள் நடக்கும் அன்றாட அறிக்கைப் போர் தொடர்பான ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கூட்டமைப்பு எந்த நோக்கத்துக்காகத் தோற்றுவிக்கப்பட டதோ அந்த இலக்கிலிருந்து விலகி எதிர்த்திசையில் பயணிக்கத் தொடங்கிய நிகழ்வுப் பொறிமுறையா னது முள்ளிவாய்க்காலில் போர் மௌனிக்கப்பட்ட நாளில் இருந்தே மெல்லமெல்ல ஆரம்பிக்கப்பட்டு இன்று தேர்தல் காலத் தேவைக்காக மட்டுமே அந்த இலக்கின் நோக்கத்தையும், கூட்டமைப்பை ஆரம்பித்தவரின் இலட்சியத்தையும் அதன் தற்போதைய தலைவர்கள் எனக் கூறிக் கொள்வோர் நினைவுபடுத்திக் கொள்கிறார்கள் என்பது வெளிப்படையான உண்மை. இந்த உண்மையை மக்கள் புரிந்து கொண்டதன் விளைவே இம்முறை தேர்தலில் கூட்டமைப்புக் கும்பல் மக்களால் பெருமளவில் நிராகரிக்கப் பட்டமைக்கான காரணமாகும்.

இந்த உண்மையை புரிந்து கொண்டு தோல்விக்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு தம் இயலாமையை, மக்களுக்கான அரசியல் செல்நெறி ஒன்றை வகுத்துச் செயற்படும் திறனின்மையை ஒப்புக்கொண்டு பொது மக்களிடம் மன்னிப்பு கேட்கும் மனோபாவமற்ற கூட்டமைப்பின் தலைவர்கள் தேர்தல் பின்னடைவுக்கு ஒருவர் மாறி ஒருவர் மற்றவர்கள் மீது பழிபோட்டு தம்மை தூய்மையானவர் கள் என்று நிரூபிக்க உட்கட்சி மோதல்களில் வெளிப்படையாகவே ஈடுபட்டுவருவது தான் தலைக் குனிவை ஏற்படுத்தும் விடயமாகும்.

கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல... என்றும் உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போன்று... எனவும் தமிழில் இருக்கும் பழமொழிக்கு மிகச் சிறந்த உதாரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றே கூறவேண்டும். இந்த அமைப்பு உருவாக்கத்தின் போது இணைந்து செயற்பட்ட சில அமைப்புகள் இப்போது கூட்டமைப்பை விட்டு வெளியேறி புதுப்புதுக் கூட்டுகளை ஏற்படுத்திக் கொண்டு, தனித்தனிக் குழுக்களாக (இவற்றைக் கட்சிகள் என்று எந்த வகையிலும் அடையாளப்படுத்த முடியாது) தத்தம் சுய "இச்சை"களுடன் கூடிய அரசியல் பவனிக்குள் ஊர்வலம் வரத் தொடங்கியதுடன், கூட்டமைப்பு என்ற பலமான கட்டமைப்பை சிதைத்து விட்டார்கள். தமிழ் தேசிய நீக்க அரசியலை திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கும் பேரினவாதத் தலைமைகளுக்கு ஜால்ரா அடிக்கத் தொடங்கிவிட்டார்கள். இவர்களின் இந்த அபஸ்வர இசையை கைதட்டி வரவேற்று ரசிக்க மக்கள் தயாராக இல்லை. எனவேதான் இந்த வாக்குமாறாட்டத்துக்கு உள்ளாகி விட்ட தலைமைகளை வாக்களிப்பின் போது "கடாசி" எறிந்து விட்டார்கள். இங்கு பின்னடைவையும், தோல்வியையும் சந்தித்தது தமிழ்த் தேசிய கருத்துவாக்கமோ, கொள்கைகளோ அல்ல - ஆளுமையற்ற தலைவர்கள் மட்டுமே! தேர்தல் முடிந்து புதிய அரசும், அமைச்சரவையும் பதவிப் பிரமாணமும் எடுத்து முடிந்து பிரச்சினைக்கு ரெலோ ஒரு புதிய தீர்வைக் கோர... அதாவது அந்தப் பதவிக்கான நியமனமானது சுழற்சி முறையில் தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப் போக சிக்கல் இடியப்பச் சிக்கலாகிவிட்டது. இவற்றிற்கு தீர்வுகாண அதாவது கூட்டமைப்புக்குள் ஏற்படத் தொடங்கியுள்ள விரிசலுக்கு ஒட்டுப்போட்டுச் சமாளிக்கும் முயற்சியாக கூட்டமைப்பின் உறுப்புரிமைக் கட்சிகள் திருமலையிலும், கொழும்பிலும் சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றன. ஆனாலும் இப்பேச்சுக்களில் முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நிச்சயமாக ஒரு தந்திரோபாய ரீதியிலான காய் நகர்த்தல் இருக்கவே செய்யும்.

மீண்டும் தமிழர் அரசியலை அபிலாஷைகள் என்ற விடயத்தை கையில் எடுத்து இலங்கை அரசை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக் கும் மூலோபாயத்தை இந்தியா கையாளாது என்று சொல்ல முடியாது. நல்லாட்சி அரசின் நலன் கருதி அதனை காப்பாற்ற முண்டு கொடுக்க முன்சென்ற கூட்டமைப்பின் சிரேஷ்ட அரசியல்வாதிகள் இந்திய நலனுக்கு முண்டு கொடுக்க பின்னிற்பார்களா, என்ன? ஆக கூட்டமைப்பினரின் அரசியல் சுயசிந்தனையின் அடிப் படையில் தமிழ் மக்கள் நலன் கருதிய



செயற்படவும் தொடங்கி விட்டது ஆனால் தமிழ் கட்சிகளுக்குள்ளே யான உட்கட்சி பூசல்கள் ஓயவில்லை. பொதுக்குழு, மத்தியகுழு, செயற்குழு, என அனைத்துக் குழுக்களும் அனைத்துக் கட்சிகளுள்ளும் வெவ்வேறு காரணங்களுக்காக குடுமிப்பிடிச்சண்டைகளும், அறிக்கைப் போர்களும் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதுதான் அசிங்கம் தமிழரசுக் கட்சிக்குள் தலைமைக் கதிரைக்கு இலக்கு வைத்து சிறிதரனும், சுமந்திரனும் மேற்கொண்டதாக கூறப்படும் முயற்சிகள் அம்பலத்துக்கு வந்தபின் அதன் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசா விழிப்படைந்தவராய், அதிலிருந்து தனது இருப்பை பாதுகாத்துக் கொள்ள மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கட்சிக்குள்ளேயான உட்பூசல்களை மக்கள் மத்தியில் நகைப்புக்கிடமான விடயமாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து கூட்டமைப்பின் ஏனைய கூட்டுக் கட்சிகளான புளொட்டும் ரெலோவும் சுமந்திரனை கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியில் இருந்து நீக்க வேண்டும்மெண்டும் அப்பதவியை தங்கள் கட்சிகளில் உள்ள ஒருவருக்கு வழங்க வேண்டுமென்றும் அறிக்கைவிட பிரச்சினை புதிய சிக்கல் ஒன்றை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. அதேவேளை பிரச்சினையை எதிர்கொண்டு ஒருவாறு தீர்க்கப்பட்டு விட்டதாகக் கூறப்படும் "போனஸ்" ஆசனப் இந்தப் பிரச்சினை அயலக அரசுக்கு புதிய தலையிடியைக் கொடுப்பதாகவும் ஊடக உள்வட்டாரங்களில் செய்தி கசிய ஆரம்பிக்க, கூட்டமைப்பினரை இந்தியத் தூதரகம் ஒரு சந்திப்புக்காக அழைத்திருப்பதாகவும் மற்றொரு தகவல். இப்பத்திரிகை வெளிவரும் சமயத்தில் அச்சந்திப்பு நிகழ்ந்து மிருக்கலாம். தமிழ்த் தலைமைகளை தூதுவராலயம் சந்தித்து பேச அழைப்பதானது ஏதாவது உள்நோக்க மின்றி நடக்காது என்பது உறுதி... ஏற்கனவே 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என சிங்கள - பௌத்த அமைப்புகள் அரசுக்கு வெளிப்படையாகவே அழுத் தம் கொடுத்து வருவது இந்தியாவை சற்றே எரிச்சலுறச் செய்துள்ள நிலையில் இந்திய அயலுறவுத்துறை யைச் சேர்ந்த ஜெயசங்கர் கடந்த வாரத்தில் பிரதமர் மஹிந்தவைச் சந்தித்து பேசியதை அடுத்து கூட்ட மைப்பினரை தூதரகம் சந்திக்க அழைப்பது வெறும் மரியாதையின் நிமித்தமான சந்திப்புத் தான் என எவரும் கூறுவார்களேயானால் அதனை நம்பக் கூடியவன் இரு காதுகளிலும் பெரிய பூ வைத்தவ னாகவே இருக்க வேண்டும்.

இந்திய - சீன- அமெரிக்க முத்தரப்புக் கண்காணிப்பில் சிக்குண்டு மூவரையும் எப்படியாவது சமாளித்து விடலாம் என அரசு வியூகம் வகுத்து வருகையில் இந்தியா தமிழர் தரப்பு அரசியல் தலைமைகளுடன் சந்திப்பை மேற்கொள்ள முயற்சிப்பதன் பின்னால் ஒரு புதிய நகர்வை மேற்கொள்ள அயலக ஆலோசனை நிச்சயம் உதவாது என்பது வரலாறு நமக்குக் கற்றுத்தந்த பாடமாகும். எப்போதுமே வில்லுப்பாட்டின் போது பாடுபவரின் பின்னாலிருந்து "ஆமா, ஆமா" என்று தலையாட்டி "கோரஸ்" இசைப்பவர் களைப் போன்று இந்தியாவுக்கு "ஆமா சார்" - அப்படியே செய்யுறோம் சார்..." என்று கூறியே இன்றுவரை செயற் படும் கூட்டமைப்பினர் இம்முறையும் அதையே பின்பற்றுவார்களேயானால் அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சந்தித்த அதே பரிதாபமான நிலை கூட்டமைப்புக்கும் ஏற்பட்டே தீரும். அதனை விடவும் தமிழ் தேசிய அரசியலை நீர்த்துப் போகச் செய்த வரலாற்று துரோகிகள் என்ற அதியுயர் துரோகிகளுக்கான கௌரவத்தையும் நிரந்தரமாகப் பெற்றவர்களாகி விடுவார்கள். எதுவானாலும், தளர்ச்சி யடைந்து போன தலைமையும், பதவி களுக்காகவும், சுயநல அபிலாஷை களுடன் கூடிய சலுகைகளுக்காகவும், ஏனைய வசதி வாய்ப்புகளுக்காகவும் தமது இனத்தின் உரிமைகளை விட்டுக் கொடுக்கவும், பேரம் பேசவும் அயலக அரசியல் அபிலாஷைகளுக் காக தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக் களை புறந்தள்ளி அரசியல் "பிஸினெஸ்" செய்யவும் தொடர்ந்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்தும் இயங்க முற்படுவார்களே யானால் அதனால் அவமானப்படவும் பாதிக்கப்படவும் போவது அவர்களின் வாரிசுகளும் தான்.

# 13வது திருத்தச் சட்டத்தை நீக்க.. இந்தியா அனுமதிக்காது !!!

நற்குணன்



13வது திருத்தச் சட்டம் என்றால் என்ன? அது ஏன் உருவாக்கப் பட்டது? அது அமுல்படுத்தப்படுமாயின் இலங்கைத் தமிழர் பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்பட்டு விடுமா? 13வது திருத்தச் சட்டத்தை நீக்குமாறு பிக்குகள் தொட்டு இனவாத அரசியல் ஆளுமைகள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்துவரும் நிலையில், இலங்கை அரசினால் ஏன் அதில் கைவைக்க முடியவில்லை? எனப் பல்வாறான கேள்விகள் மக்கள் மத்தியில் எழுகிறது. இந்தியாவின் நலன்களைப் பாதுகாக்க வென இலங்கை நலன்கள் இதற்குமுன் பல முறை அடகு வைக்கப்பட்டிருப் பதைப்போல, ஈழத் தமிழர்களுக்கு உதவுகிறோம் என்ற போர்வையில், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ளவும், மேலும் விஸ்தரித்துக் கொள்ளவும், அதனூடாகத் தனது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் வலிந்து உருவாக்கப்பட்டதே இந்தப் 13வது திருத்தச் சட்டம்.

உண்மையில் இந்தப் 13வது திருத்தச் சட்டம் ஈழத்தமிழர்கள் நலனைக் காக்க வெனத்தான் உருவாக்கப்பட்டதாக இந்தியா சொல்லுமாயின், 13வது திருத்தச் சட்டத்தில் முக்கியமாகச் சொல்லப்பட்ட வடக்குக் கிழக்கு இணைப்பை. ஜே.வி.பி யினர் நீதிமன்றத்தினூடாகத் துண்டித்த போது இந்தியா தலையீடு செய்து நியாயம் கேட்டிருக்க வேண்டும்.நிரந்தர தீர்வு எட்டும்வரையாவது அதனை நடைமுறைப்படுத்தி வைத்திக்க வேண்டும்.தனது நலன்கள் அதில் பாதிக்கப்படவில்லை என்றதால் இந்தியா மௌனமாக இருந்ததோ? தேர்தலின் பின்னர் இலங்கை எடுத்துவரும் அரசியல் நடவடிக்கை களை இந்தியா உன்னிப்பாக அவதானித்துவருவதாகச் சொல்லப்பட்ட நிலையில், இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு வந்து போயிருக்கிறார். புதிய பாராளுமன்றம் அமைவதற்கு முன்னரே, 13 மற்றும் 19 ஆவது திருத்தச் சட்டங்களின் நீக்கம் பற்றி, அதிகளவு அரசுசார் நாடாளு மன்ற உறுப்பினர்களும், அரச உயர் அதிகாரிகள் பலரும் அவைபற்றிப் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் பேசுவதை வைத்து அதில் பாதியினருக்கு அந்தச் சட்டங்கள் தொடர்பாகப் பூரண அறிவு இல்லை என்றும், அதில் 13 வது திருத்தச் சட்டமூலம் நீக்கப்படுமாயின் அதனால் அயல் நாடான இந்தியாவின் அயலக உறவுக் கொள்கையில் ஏற்படக் கூடிய மாற்றம் பற்றியும், அதற்கு இலங்கையினால் முகம் கொடுக்க முடியுமா? என்று கூடச் சிந்திக்காம லேயே இவர்கள் கருத்துத் தெரிவிப்ப தாகவும் எண்ணத் தோன்றுகிறது.

முதலில் 13 வது திருத்தச் சட்டமூலத்தை எடுத்துக் கொண்டால்,1986 இல் இந்தியா இலங்கையுடன் ஏன் அந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது? மேலோட்டமாக இலங்கைத் தமிழருக்காக இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டாலும், பின்னணியில் இந்தியாவின் பாதுகாப்புச் சார்ந்த நலன்களே அதிகம் உள்ளடக்கப் பட்டிருந்தன. பூகோள ரீதியாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை கொண்டுள்ள முக்கியத்துவத்தை அறிந்த வேறு எவரும் இலங்கை மீது ஆதிக்கம் செலுத்துவதைத் தடுப்பதாகவே அவ் ஒப்பந்தம் அன்று கைச்சாத்திடப்பட்டது. அந்த இரகசியத்தை அரசியல் ஆய்வாளர்கள் மட்டுமே அறிவர். அதில் ஈழத் தமிழர் கள் பிரச்சினை என்பது பகடைக்காயாக மட்டுமே பாவிக்கப்பட்டது என்ற உண்மையையும் அவர்கள் நன்கு அறிவர்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தச் சட்டம் அமுலில் இருக்கும் போது நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது என்பது நாட்டை மேலும் சிக்கலுக்குள் தள்ளும் நடவடிக்கை எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச 2018 ஏப்பரலில் தெரிவித்திருந்தார். அவர் ஒரு இந்திய விரோதக் கொள்கையுடைய வராக இருந்தாலும் யதார்த்தத்தை நன்கு புரிந்துகொண்டே இக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார் என்று எண்ணலாம். முதலில் இந்த 13 வது திருத்தச் சட்ட மூலம் யாருக்காக? யாரால்? எதற்காக? உருவாக்கப்பட்டது என்ற கேள்விக்குத் தெளிவான விளக்கம் தெரியாமலே பலர் பேசிவருவதும், கருத்துத் தெரிவிப்பதும் தான் நாடு குழப்பத்தில் இருப்பதற்குக் காரணமாகிறது. குறிப்பாகத் தமிழ் மக்களைவிட, தமிழ் அரசில்வாதி களைவிட இதில் அதிகம் குழப்பத்தில் இருப்பது சிங்கள இனவாத அரசியல்வாதிகளே என்றுதான் சொல்லலாம். இங்கு யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையினூடாகவே இந்தப் 13 வது திருத்தச் சட்டமூலம் அமுல்படுத்தப்பட்டது. ஈழத் தமிழர் களைக் காக்க வென வந்த இந்திய அரசினால் கைச்சாத்திடப்பட்ட இவ் ஒப்பந்தத்தில், ஈழத்தமிழர் நலன்களைக் காப்பது என்பதைவிட, இந்திய நலன்களைக் காப்பதிலேயே இவ் ஒப்பந்தத்தை வரைந்தவர்கள் அதிக அக்கறை கொண்டிருந்தனர் என்றதை ஒப்பந்தத்தில் உள்ள பல விடயங்கள் எமக்குப் புலப்படுத்து கின்றன. இந்திய நலன் சார்ந்த பல விடயங்கள் இதில் முன்னிறுத்தப் பட்டிருப்பதைச் சட்டவல்லுநர்கள் அறிவர். இந்தச் சட்டத்தின் மூலம் இந்தியா தமது நலன்சார்ந்த பல விடயங்களை, சூட்சுமமாக நிறைவேற்றி இருக்கிறது. இதன் ஒரு அம்சமே திருகோணமலையில் இந்தியா தன்வசப்படுத்தியுள்ள எரிபொருள் குதங்கள் தொடர்பான குத்தகை எனலாம்.அந்தக் குத்தகையின்படி அங்குள்ள எரிபொருள் தாங்கிகளில் வெறும் 15 ஐ மட்டுமே இந்திய எண்ணெய் கம்பெனி உபயோகித்துவருவதாகச் சொல்லப் படுகிறது. அந்த எண்ணெய் வயலில் உபயோகப்படுத்தாது மீதமாக உள்ள தாங்கிகளை இந்தியாவிடம் மீளப் பெற்றுத் தமக்கு வழங்கும்படி சீனா கேட்டதாகவும், அதற்கு இந்தியா இணங்கவில்லை எனவும் செய்திகள் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது. எனவே ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும்போதே இவ்வாறு ஒரு பிணக்குத் தொடரும்போது, 13 வது திருத்தச் சட்டமூலம் இல்லாது ஒழிக்கப்படுமாயின், அதன் பின்பு இலங்கையின் இந்தியா தொடர்பான கொள்கையில் மாற்றம் ஏற்படாதா? ஏற்கனவே சீன சார்ப்பாக இலங்கை செயற்படுவதாகக் குற்றம் சாட்டப்படும் நிலையில், 13 வது திருத்தச் சட்டமூலம் இல்லாது ஒழிக்கப்படுமாயின், இலங்கை - சீன உறவுகளில் ஏற்படும் சீன நலன் சார் மாற்றங்கள் இந்திய நலனைப் பாதிப்பதோடு இந்து சமத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் பலத்தை இழகச் செய்துவிடும். எனவே 13 வது

திருத்தச் சட்டமூலத்தை இல்லாது ஒழிக்க இந்தியா துணைபோகுமா? எனவே தமிழ் மக்கள் நலன்களைப் பாதுகாப்பது என்ற போர்வையில் தன்நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்று விரும்பும் இந்தியா 13 வது திருத்தச் சட்டமூலத்தை இல்லாதொழிப்பதற்கு விரும்புமா? அப்படி விரும்பினால் இவ் ஒப்பந்தத்தினூடாக, தனது அரசியற் செயற்பாடுகளை முன்னெடுக்கவும், இலங்கை வளங்களைக் கையகப்படுத்த எண்ணும் இந்தியா கொண்டுள்ள உள் நோக்கங்கள் என்னவாகலாம்?

2009 க்கு முன்னரான காலப்பகுதியில், இலங்கையில் தனது முதலீட்டைக் கொண்டுவரத் தயக்கம் காட்டி வந்த சீனா, யுத்த மௌனிப்புக்குப் பின்னர், வலு வேகமாகத் தனது முதலீடுகளை இலங்கைக்குள் நகர்த்தியதோடு மட்டுமல்லாது, தனது மக்கள் பயமின்றியும், தங்குதடையின்றியும் இலங்கைக்குள் பிரவேசிக்கவும், நடமாடுவதற்குமுரிய வசதி வாய்ப்புகளையும் செய்து கொடுத்ததோடு, தமது ஆளுகைக்குட்ட பட்ட பிரதேசமென்ற மாயையும் சீன மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. அதனால், சீன தேசத்தை மையமாகக் கொண்டு இயங்கும் பன்னாட்டு நிறுவனங்கள் தொட்டு, சீன மக்களால் நடத்தப்படும் பெட்டிக்கடைகள் வரை தெற்கிலங் கையை இன்று ஆக்கிரமித்திருப்பது கண்கூடு. சிறிமாவோ பண்டார நாயக்கா பிரதமராக இருந்த 1970 களிலே இலங்கை - சீன உறவு நன்றாக இருந்தது.

அக்காலகட்டத்திலேயேதான் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் ஸ்தாபிக்கப்பட்டது மற்றும் விமானநிலைய மறுசீரமைப்பு என்பன போன்ற பல அபிவிருத்திகள் சீன அனுசரணையோடு முன்னெடுக்கப் பட்டது. அதற்குப் பின் தமிழ் இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தொடர் தாக்குதல்களினால் இலங்கை அமைதியான நாடு என்ற பெயரை மழுங்கடித்துக் கொண்டது. சர்வதேச முதலீடுகளுக்குப் பொருத்தமான நாடாக இலங்கை இல்லை என்ற தோற்றப்பாடு ஏற்பட்டதனால் சர்வதேசம் இலங்கையில் முதலிடுவதைத் தவிர்த்துக் கொண்டது. அவ்வழியே சீனாவும் சற்றுப் பின்வாங்கிக் கொண்டது என்றும் சொல்லலாம். ஆனால் சீனாவின் கண் எப்பொழுதும் இலங்கையில் மீதிருந்தது என்பதை சீனாவின் அண்மைக்கால நடவடிக்கைகள் எடுத்துரைக்கின்றன. இலங்கையில் யுத்தம் தீவிரமடைந்தபோதே, அதற்கு முன்னர் இலங்கையில் முதலிட ஆர்வம் கொண்டிருந்த நாடுகள் எல்லாம் வேறு வழியின்றி இந்தியாவை நாடத்தொடங்கின. அந்தக் காலகட்டதிலேயே உலக வர்த்தக அரங்கில் பிரபலம் பெற்றிருந்த "இலங்கைத் தேயிலை" என்ற பெயர்




மழுங்கடிக்கப்பட்டு "இந்தியத் தேயிலை" என்ற நாமம் மேலோங்கியது எனலாம்.இன்று உலகத் தேயிலை வியாபாரத்தில் **"CEYLON TEA"** என்ற பெயரிலும் **"INDIAN TEA"** பிரபலம் பெற்றிருப்பதே இதற்குச் சாட்சி. எனவே இப்படிப்பட்ட பல சிக்கல்களைக் கொண்ட இலங்கை - இந்தியா - சீனா ஆகிய நாடுகளுக்கிடையேயான அரசியலில், இந்தியா தனக்குச் சாதகமான பிடிமானங்களைக் கொண்ட 13 வது திருத்தச் சட்டமூலத்தை, அதுவும் இந்திய நலனை இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் தக்க வைத்துக் கொள்ள உதவும் 13 வது திருத்தச் சட்டமூலத்தை நீக்க இந்தியா விரும்புமா?

தற்போது 3 இல் 2 பங்கு வெற்றியினைத் தனதாக்கிக் கொண்ட ராஜபக்ச அணியின் அபார வெற்றியினால் அவர்கள் பல விடயங்களைத் தான்தோன்றித் தனமாக முன்னெடுக்க முனைவார்கள். அதில் அதிகளவு சீன சார்பு இருக்க வாய்ப்புண்டு. எனவே தன் நலன் கருதி இந்தியா தனது கிடுக்குப் பிடியை இறுக்கலாம். அப்படி இறுக்கும்போது அவை தமிழர் நலன் சார்ந்ததாக இருப்பதாகவே இந்தியா காட்டிக் கொள்ளும். அந்த இறுக்கத்தின் முதலடியோ இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரின் திடீர் விஜயம்????

யார் என்ன சொன்னாலும், 1987 இல் இந்தியா செய்து கொண்ட ஒப்பந்தம் . முளைவிட்டு, வளர்ந்து, விட்சமாகி இப்போதுதான் பலனளிக்கப் போகிறது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் நலன்களைப் பாதுகாக்க 13 வது திருத்தச் சட்டமூலம் தான் அதிகளவில் அவர்களுக்கு உதவப் போகிறது. அந்தப் பெருமழையின் தூவானம் தமிழர்களுக்குப் பயன்தருமா?




சரசக்கா என்னத்தைப் புதுசாச் சொல்லப்போறன். எல்லாம் நம்ம ஆக்களைப் பற்றினதுதான். வாக்கு வாங்க வரேக்கை இல்லாதது பொல்லாதது எல்லாத்தையும் சொல்லிக்கொண்டு வாறது. அப்ப ஒரு மாதிரி. பிறகு வெண்டாப் பிறகு வேறை ஒரு மாதிரி. அவையளின்ரை வாக்கு மாறித் தலைகீழா வேலைசெய்யும் எண்டது இப்ப தெரியிது. எல்லாரிலையும் மனம் விட்டுப் போனாப்போலை நாங்கள் கனபேர் சைக்கிள் தம்பியளிலைதான் அதிகம் நம்பிக்கை வைச்சிருந்தனாங்கள். ஆனால் அவையின்ரை கட்சியும் போற போக்கைப் பாத்தால் , திருப்பியும் சைக்கிள் காத்துப் போட்டுதோ? வால் ரியூப்பிலை ஓட்டையோ? முள்ளுக் குத்திச்சுதோ? கல்லுக் குத்திச்சுதோ? ரியூப்பை மாத்த வேண்டி வருமோ? இல்லாட்டி வல்கனைசிங் செய்து போடலாமோ? இல்லாட்டி ரையர், ரியூப் இரண்டையும் சேத்து மாத்த வேண்டி வருமோ? இல்லாட்டி ஐஞ்சு சந்தியிலை இருந்துவாற பழம் இருப்புக்கடைக்கார னிட்டைத் தூக்கிக் குடுத்திட்டு பிளாஸ்ரிக் வாளியை வேண்டுறதோ எண்டு ஒண்டையும் வடிவாச் சொல்லேலாமல் கிடக்கு . இதைச் சைக்கிள் சொந்தக்காரர்தான் சேந்து முடிவெடுக்க வேணும். குழப்பம் எல்லாரிட்டையும் இருக்கு. குழப்பமில்லாமல் ஒண்டும் இல்லை. ஆனால் குழப்பத்தை மேலை மேலை குழம்பவிடாமல் பாக்கிற கெட்டித்தனம் தலைமையிட்டை இருக்க வேணும். இப்ப இருக்கிற சூழலிலை எங்கை குண்டூசியாலை தன்னும் ஒண்டை போட்டால் அதை ஆனை பூந்து போற அளவுக்குப் பெரிசாக்க எண்டு ஆக்கள் பாத்துக் கொண்டிருக்கினம். அதாலை கவனமா , நிதானமா அடி எடுத்து வைக்க வேணும். மணி என்ன அந்நியனே? இரண்டு அடியயைப் போட்டு இரெடா எண்டு இருத்துங்கோ பாப்பம். அந்த உரிமை உங்களுக்கு இருக்கு. பல காலமா ஒரு வட்டிலிலை சோறு போட்டுச் சுத்தவர இருந்து சாப்பிட்டுக் கும்மாளம் போட்ட கூட்டமெல்லே, நீங்கள்! உங்களுக்கை இப்ப என்ன வந்திட்டுது? பேய் தொத்தி ஆட்ட, வோட்டுக் கோக்கப் போறன் எண்டிட்டு எங்கினையாலும் சுடலைப் பக்கம் போனனீங்களே? கிடாய்க்குக் கொழுப்பேறிறது கூடாது கண்டியளோ. விலையும் போகாது. இறைச்சியும் வழு வழு வெண்டு இருக்கு மெண்டு ஆரும் வாங்கமாட்டினம். அரசியல் ஆடுகளத்திலை இறங்கிவிட்டியள், நீங்கள் அதை எப்பிடி ஆடி முடிக்கிறதெண்டது நோக்கமாயிருக்க வேணும். அதைவிட்டிட்டு குழந்தைப் பிள்ளைத் தனம் கூடாது. "சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது " எண்டு சனத்தைச் சொல்லப் பண்ணப் போறியளே? நீங்கள் குழப்படி விடுகிறதாலை நீங்கள் கெட்டுப்போறது ஒரு பக்கம் இருக்கட்டும். சனத்தின்ரை நம்பிக்கையிலை மண் அள்ளிப் போடுறதாத்தான் முடியும். மக்களை நீங்கள் மனக்கிலேசப்பட வைக்கப்பிடாது எண்டு மட்டும் நினையுங்கோவன். எல்லாம் சரிவரும். அந்தக் காலத்திலை தண்ணி இறைக்க மிஷின் இல்லை. பட்டையாலை இறைச்சுத்தான் பயிர் செய்து, எல்லாக் காரியங்களையும் ஒப்பேற்றினனாங்கள். குடும்பத்துக்குப் பத்துப் பிள்ளை குட்டியள் பெத்து, வளத்து, அதுகளை ஆளாக்கி விட்ட அனுபவத்தோடை இப்ப ஆர் இருக்கினம்? எல்லாரும் புறோய்லர் கோழி மாதிரி வந்திட்டினம். எல்லாருக்கும் வருத்தமும், துன்பமும்தான் மிச்சமாக் கிடக்கு. அப்ப வருத்தக்காறச் சமூகமாக நாங்கள் இருக்கிறம் எண்டதை மறக்காதையுங்கோ. நாங்கள் எல்லாவிதத்திலையும் நோய்வாய்ப் பட்டுப் போயிருக்கேக்கை, சனத்தை மேலும் வருத்திறமாதிரியான காரியங்களை நீங்கள் செய்யப்பிடாது. விளங்கிதோ.? உடனை போய் மணியோடை கதைக்கிறியள். பிரச்சினையைப் பேசிறியள்.அவர் பிழைவிட்டால் "இஞ்சை பார் மணி. இன்ன பிழை விட்டிட்டாய்.உது சரி வராது." எண்டு சொல்லிப்போட்டு இனிமேல் நாங்கள் எல்லாரும் சேந்து கட்சியை வடிவாக் கொண்டு போவம் எண்டு சொல்லி ஒண்டு சேந்து காரியத்தைப் பாருங்கோ. இல்லை நீங்கள் பிழைவிட்டிட்டால் "சொறி" சொல் லிக் கொண்டு சேருற வழியைப்பாருங்கோ. அதைவிட்டிட்டு பல்லை குத்தி மணக்கிற வேலை. குப்பையைக் கிழறிற வேலை செய்யாதையுங்கோ.பிறகு மணத்தை எங்களாலை தாங்கேலாது. ஆன படியாலை உந்த விளையாட்டை எல்லாம் விட்டிட்டுப் போய் பாக்கிற வேலையைப் பாருங்கோ. எனக்கு வேற வேலை இருக் கு. போட்டு வாறன்.





# மலைக்கிராமத்தில் ஓர் கல்வியாலயம்.

முயிங்கா, ஆப்ரிக்காவின் பேரேரிகளுக்கு அண்மையில் அமைந்துள்ள ‘புருண்டி’ எனும் தேசத்தில் அமைந்திருக்கும் ஒரு சிறுநகரம். முயிங்காவின் முதல்நூலகம், உள்ளூர் மக்களுடைய உழைப்பின் உதவியால், நெருக்கியழுத்தப்பட்ட மண்கற்களைக் கொண்டு (**Compressed Earth Blocks**), மரபும் நவீனமும் ஒன்றையொன்று சமன்செய்யும் கட்டிடக்கலை அழகியலோடு கட்டப்பட்டுள்ளது. மேலும், காதுகேளாத குழந்தைகளுக்கான பள்ளிக்கூடமும் எதிர்வரும் காலத்தில் இங்கு இயங்கவுள்ளது. வாழ்க்கை சுழற்சிகள், நீர்வள சுழற்சிகள் மற்றும் ஆற்றல் சுழற்சிகள் ஆகிய இயற்கைக்கூறுகள் இந்தக் கட்டுமானச் செயல்முறையுடன் இணைக்கப்பட்டன. பெரும்பாலும் மறுபயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் சூழலைச் சிதைக்காத ஆதாரக் கட்டுமானப் பொருட்களின் உதவியால் தேர்ந்த வடிவியல் நுட்பங்களோடு இந்தக் கல்வியாலயம் எழுந்துள்ளது.
புருண்டியில் உள்ள உள்ளூர் கட்டடக்கலை நடைமுறைகள் பற்றிய முழுமையான ஆய்வு, இந்நூலகக் கட்டிட வடிவமைப்பின் அடிப்படையாகும். பிராந்தியத்திலும் அதைச் சுற்றியுள்ள மாகாணங்களிலும் இரண்டு மாதங்கள் முழுமையான களப்பணி செய்து, உள்ளூரில் கிடைக்கும் ஆதாரப்பொருட்கள், கட்டுமானத் தொன்ம நுட்பங்கள் மற்றும் கட்டிட அச்சுக்கலை பற்றிய நுண்ணறிவை பெற்றபிறகே கட்டிடக் கலைஞர்கள் தங்களின் பணியைத் துவங்கினார்கள். இதன்மூலம், முயிங்காவின் உள்ளூரறிவு மற்றும் மரபுவழி தொழிற்திறன்கள் பயன்படுத்தப்பட்டும், புதுப்பிக்கப்பட்டதோடும் மட்டுமில்லாமல் தேவையான இடத்தில் மறுபரிசீலனை செய்யப்பட்டும் நூலக கட்டுமானத்துடன் பிணைக்கப்பட்டது.

இந்த நூலகம், வட்டவடிவ அரவணைப்பு வெளியுடன், நீளவாட்டு வடிவத்தில் கட்டுமானம் செய்யப்பட்டுள்ளது. இதிலுள்ள ‘வெளித் தாழ்வாரம்’ என்பது புருண்டிய பாரம்பரிய வீடுகள் அனைத்திலும் நம்மால் பொதுவாகக் காணப்படும் வடிவத்தில் எழுப்பப்பட்டுள்ளது. ஏனெனில், இது கடுமையான மழை மற்றும் கடுமையான வெயிலிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் தங்குமிடம் வழங்குகிறது. இந்த தாழ்வார மண்டபத்தில்தான் இப்பகுதி மக்களின் பெரும்பான்மை வாழ்க்கை நிகழ்கிறது் சந்திப்புகள், ஓய்வு, உரையாடல், காத்திருப்பு என இதுவொரு உண்மையான சமூக இடம், சமூக உறவுகளுக்கான கூடுகை அமைப்பு.
இந்த நீள்தாழ்வாரம் வேண்டுமென்றே பெரிதாக்கப்பட்டு நூலகத்தின் அளவோடு ஒத்திசையும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது. நெடுவரிசைத் தூண்களுக்கு இடையில் பொருத்தப்பட்டுள்ள கண்ணாடிக் கதவுகள் நூலகத்திற்கு உள்பகுதிக்கும் தாழ்வாரத்திற்கும் இடையிலான தொடர்புகளை உருவாக்குகின்றன. இந்தக் கதவுகள் முழுமையாகத் திறக்கப்பட்டால், பிரமிக்கவைக்கும் இயற்கைக்காட்சியான புருண்டியின் ‘1000 மலைகள்’ மீது நம் பார்வை படர்கிற வகையில் நூலகத்தை மலைவெளி நோக்கி திறக்க வைக்கின்றன சாளரச்சதுரங்கள்.

நீளவாட்டு முடிவில், இந்தத் தாழ்வாரமானது ஊர்வீதியில் சென்று திறக்கிறது, அங்கு மறைப்புத்தடுப்புகள் மூலமாக அணுகலைக் கட்டுப்படுத்தும் (அதேவேளையில் காற்றும் ஒளியும் ஊடுருவும்) அமைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மறைப்புத் தட்டிகள் தெருமுகப்பில் ஒரு முக்கியமான கட்டடக்கலை நீட்சியுறுப்பு ஆகும், இது நூலகம் திறந்திருக்கிறதா அல்லது மூடப்பட்டிருக்கிறதா என்பதை தூரத்திலிருந்தும்கூட தெளிவாகக் காட்டுகிறது. தாழ்வாரத்தின் மறுமுனையானது, பிரதான புழங்குமிடமாகப் பயன்படும். எதிர்வரும் காலத்தில் பள்ளிக்கூடம் அமைக்கப்படுகையில் அதற்கான நுழைவுவழியாகவும் இது தொலைநோக்குப் பார்வையில் அமைந்திருக்கிறது.

புருண்டிய தேசத்துக் (பொதுவாக, ஆப்பிரிக்க மரபு) கட்டிடக்கலையில் ஒரு மிக முக்கியமான அம்சம் என்பது கட்டுமானப் பகுதியின் எல்லை நிர்ணயம் ஆகும். குடும்பக் குடியேற்றங்களாக ஒன்றிணைந்து வாழ்ந்த பழங்குடிக்கால நடைமுறைகளுக்குச் சொந்தமான ஒரு பாரம்பரியமே இந்த எல்லையமைப்பு. முயிங்கா நூலகத்தைப் பொறுத்தவரை, இதனுடைய கூட்டுச்சுவரானது உள்ளூர்வாசிகள் மற்றும் உள்ளூர் தன்னார்வத் தொண்டு நிறுவனத்துடன் இணை - வடிவமைப்பு செயல்பாட்டில் முக்கிய கவனத்துடன் நிறைவேற்றப் பட்டது. பள்ளிக்கு உட்பக்கத்தில் விளையாட்டு மைதானம் அமைந்திருக்கும் பகுதியில் உயரம் குறைவாகவும், தெருப்பக்கத்தில் உயரமாகவும் இருக்கும்படி எல்லைச்சுவர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுவர் ‘உலர்கல் பதிப்பு’ கட்டுமான நுட்பத்தில் எழுப்பப்பட்டுள்ளதால் சாய்வு-நிலப்பரப்பை தக்கவைத்துக்கொள்ள அது உதவுகிறது. இதனால், பள்ளத் தாக்கை நோக்கிய பார்வைவெளியில் சிறிதும் சமரசம் செய்யப்படவில்லை, அதே நேரத்தில் தெருவுள்ள பக்கத்திலிருந்து பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

நெருக்கியழுத்தப்பட்ட மண்கற்கள் (சுடப்படாதவை), மண்கலவை மற்றும் சுட்ட களிமண் கூரை ஓடுகள் ஆகியவைகளின் கூட்டுவிளைவாகவே கட்டிடம் அமையவேண்டும் என்பது முன்னமே முடிவுசெய்யப்பட்டுவிட்டதால், கட்டுமானப் பொருட்களின் தேர்வுதான் முயிங்கா நூலகத்தின் பொதுவான வடிவம் உருவாக காரணமாக இருந்துள்ளது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அந்தக் கூரை ஓடுகள், வெளியூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வளைந்த இரும்புத்தகரங்களைக் காட்டிலும் அதிக எடை கொண்டவை. இது 1 மீட்டர் இடைவெளிவிட்டு 30 நெருக்கமான நெடுவரிசைத் தூண்களின் கட்டமைப்பு உருவாக வழிவகுத்தது. மேலும், இது நூலகத்தின் உயரமான சுவர்களுக்கான முட்டாகவும் துணைநிற்கிறது. நெடுவரிசைகளில் அமைந்த இந்தத் தூண்கள் மறுபடியும் மறுபடியும் கட்டிடத்தின் வெளிப்புறத்திலும் உள்ளேயும் நாம் அடையாளம் காணக்கூடிய தனிச்சிறப்பு அம்சமாகும். நெருப்பால் சுடப்படாத மண்கற்களின் தொகுதிகளை மழையிலிருந்துப் பாதுகாக்க கூரையானது 35ழ சாய்வைக் கொண்டுள்ளது, மேலும் இது நூலகத்தின் புராதான வடிவியல் கட்டமைப்பிற்கும் பங்களிக்கிறது.

காலநிலை மாற்றங்களுக்கும் இந்த கூரையானது நன்கு தாக்குப்பிடிக்கிறது. தொடர்ச்சியான குறுக்கு-காற்றோட்டம் கொண்ட நூலகத்தின் உயரமான உள்ளடுக்கு கட்டுமானம் சூடான காற்றை வெளியேற்றி ஈரப்பதம் நிலவ உதவுகிறது. எனவே, முகப்பில் உள்ள மண்கற்சுவரில் வடிவ ஒத்திசைவுக்கு ஏற்ப சீராகத் துளையிடப்பட்டிருப்பதால், அது நூலகத்திற்கு மாலையில் ஒளிரும் காட்சியைக் கொடுக்கும். நூலகத்திற்கு உள்ளே புத்தகம் வாசிக்கும் குழந்தைகளுக்கு மாலைவரை நீண்டநேரம் இயற்கை வெளிச்சம் கிடைக்க இந்தத் துளையொளிகள் வகைசெய்கின்றன. தெருவுக்குப் பக்கத்தில் உள்ள இரட்டை-அறை உயர அமைப்பானது, நூலகத்திற்கு வருகிற வாசகர்களில் ‘குழந்தைகளுக்கு’ என பிரத்யேகமாக ஒரு சிறப்பான இடத்தை உருவாக்கும் வாய்ப்பைக் கொடுத்துள்ளது. குழந்தைகளுக்கான இந்த சிறப்பிடம் தரைத்தளத்தில் குழந்தைகள் உட்காருவதற்கான ஒரு மர அமைப்பை அதன் மூலையில் கொண்டுள்ளது, இது குழந்தைகளின் மனதுக்கு ஏற்ப சௌகரியமான வாசிப்புக்கு உதவுமாறு சிறுசிறு உயர மாறுபாடுகளில் அமைக்கப்பட்டுள்ளது. இரட்டை-அரை உயரத்துக்கு நடுப்பட்ட இடை-மாடியில், தாழை நாரிழையால் உள்ளூர்ப் பின்னல்முறையில் இறுக்கிப்பின்னப்பட்ட தொங்கூஞ்சல் வலையமைப்பு கட்டப்பட்டுள்ளது . குழந்தைகள் இந்தக் கயிற்றுத்தொட்டிலில் அந்தரத்தில் மிதந்தபடி தங்கள் கனவுக்கு உயிர்தரும் புத்தகங்களை வாசித்து மகிழ முடியும். தங்களை அந்தரத்தில் நிறுத்திவைக்கும் ஒவ்வொன்றையும் குழந்தைகள் அதிகமாக நேசிக்கிறார்கள்.
எதிர்வரும் காலத்தில் இங்கு அமையவுள்ள பள்ளிக்கூட தரைத்தளமானது, ஏற்கனவே இருக்கும் நிலப்பரப்புச் சரிவுகளையும் மரங்களையும் பொருத்துவதற்கான விளையாட்டு மைதானங்களையும் முற்றங்களையும் உருவாக்கி இணைக்கும்படி கட்டப்படவுள்ளது. ஒரு முடிக்கப்பட்ட முழுமையான வடிவமைப்பைக் கொண்ட ஒரு சுயசார்புக் கட்டிடமாக முயிங்கா நூலகம் தற்போது செயல்படத் துவங்கியுள்ளது.
முறைசாராத மற்றும் வாய்மொழி உரையாடல்களை மட்டுமே அதிகளவில் சார்ந்துள்ள புருண்டிய தேசத்துக் கலாச்சாரத்தில், கதைகள், தகவல் பரிமாற்றம், கல்வி ஆகியவற்றிலிருந்து காது கேளாத குழந்தைகள் பொதுவாக விலக்கப்படுகிறார்கள். பெரும்பாலும், காது கேளாத குழந்தைகள் தனிமைப்படுத்தப் படுகிறார்கள், அல்லது ஒரு குறிப்பிட்ட இனக்குழுவினரிடமிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். அதனால் அவர்களுக்கான கல்விக்கனவு கடைசிவரை நிறைவேறாமல் போகிறது. காது கேளாத குழந்தைகளுக்கான ஒரு உறைவிடப்பள்ளியுடன் இணைக்கப்பட்ட முயிங்காவின் இந்த நூலகம், அவர்களை கல்விகற்கும் குழுவைச் சேர்ந்தவர்களாகவும், முயிங்காவின் பரந்த கலாச்சார சமூகத்தைச்

சேர்ந்தவர்களாகவும், ஊரின் பொது உட்கட்டமைப்போடு இணைத்துவைக்கும் ஒரு சமூக அசைவை முதன்முதலில் இந்நூலகம் அங்கு சாத்தியமாக்கியுள்ளது.

பிற்காலத்தில், இப்பள்ளியில் பயிலவுள்ள காது கேளாத மாணவர்கள் பள்ளிக்கூட அடிப்படையிலான மரப்பட்டறை மற்றும் பல்லிணைப்புத்திறன் பட்டறை ஆகியவற்றின் மூலமாக போதிக்கப்படும் தொழில்சார் ஆதாரக்கல்வியால், பரந்துபட்ட 'முயிங்கா' பொதுக்கலாசாரத்தில் வேற்றுமைகளின்றி ஒன்றுகலக்க இந்நூலகம் தனது சேவையை அர்ப்பணிப்போடு ஆற்றிவருகிறது.


பல ஆண்டுகளாக அல்லது பல தசாப்தங்களாக, முயிங்கா மக்கள் காப்பாற்றி வைத்திருக்கும் வடிவமைப்பு உத்திகள் நிறைந்த இந்நூலகம், நவீன கட்டிடக்கலையிலும் மிகவும் முக்கியப பங்கு வகிக்கிறது. இவ்வகையான கட்டிட முயற்சிகளில் சில மிகவும் புதுமையானவையாக தோன்றும், ஆனால், பெரும்பாலும், நிஜ வாழ்க்கை நடைமுறைக்கு ஒத்துப்போகும், நல்ல நோக்கத்துடன் கூடிய தேவையிலிருந்து அவை தவறிவிடுவதுண்டு. இதனை ஆரம்பத்தில் இருந்தே கருத்தில்கொண்டு, மக்களின் பயன்பாட்டுக்கு எளிமையான அழகியல் வடிவமாக,பழமை மற்றும் நவீனக் கட்டுமானக் கலைஞர்கள் ஒன்றுகலந்து இந்த கல்வியாலத்தை மண்ணில் எழுப்பியிருக்கிறார்கள்.

உள்ளூர்ப் பணியாளர்களின் ஒத்துழைப்பு மட்டுமல்லாமல், தேசத்தின் வெவ்வேறு பகுதியில் உள்ள மாணவர்கள், பெண்கள், பயிற்சியாளர்கள் மற்றும் இளம் கட்டிடக் கலைஞர்களை பரஸ்பர உதவியமைப்பில் ஈடுபடுத்துவதன் மூலமும் இக்கட்டிடத்தை சாதித்து முடித்திருக்கிறார்கள். மேலும் இந்த நூலகத்தின் நிர்வாகக்குழுவில் அருகிலுள்ள ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளிகளின் அனைத்து இயக்குநர்களும் அடங்குவர். இதனால், எதிர்கால காது கேளாத மாணவர்களுக்கும், காது கேட்கும் மாணவர்களுக்கும் இடையிலான தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை எளிதாகிறது. காரணம், பள்ளிக்கூட ஆசிரியப் பெருமக்கள் இந்நூலகத்தின் நிர்வாகத்தில் இணைந்திருந்து செயலாற்றும் வகையில் இந்நூலகம் தொடரியக்கம் பெறுகிறது. மேலும், இரவு நேரங்களில் இந்நூலகம் முயிங்காவின் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் திரைப்படங்கள் திரையிட்டுக் காண்பிக்கும் ஒரு சமுதாயக்கூடம் போலவும் செயல்படுகிறது.

அனைத்துவித பொருளாராய்ச்சி, வடிவமைப்பு தீர்மானங்கள் மற்றும் கட்டுமான தள அமைப்பு நிபுணத்துவம், உழைப்பாளிகள் மற்றும் கட்டுமானப் பொருட்களின் பயன்பாட்டைப் பொறுத்த வரையில் குறுவிநியோகச் சங்கிலி முறையை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதாவது கூடுமானவரை உள்ளூர் ஆற்றலை நுகர்தல். இந்த குறுவிநியோகச் சங்கிலி மூலம் உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்த முயற்சிக் கிறார்கள். தோண்டுதல், கல்லுடைத்தல், கலவை கலக்குதல் உள்ளிட்ட மண்சார்ந்த பணிகளை ஒழுங்கமைக் கும்போது இயந்திர உழைப்பைவிட, கைகளின் உழைப்பைத்தான் அதிகம் தேர்ந்தெடுத்திருக்கிறார் கள். திட்டமிட்டதைத் தாண்டிய காலம் எடுத்துக்கொண்டாலும் கைகளால் விளையும் உழைப்புக்கு அதிமுக்கியத்துவம் அளித்துள்ளனர்.

கலவைக்கு மண், கூரை மற்றும் தரை ஓடுகளுக்கு களிமண், தாழை நார் ஊஞ்சல், கூரையின் கட்டமைப்பிற்கு யூகலிப்டஸ் போன்ற உள்ளூர்ப் பொருட்களின் பயன்பாட்டில் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். மேலும் சிமெண்டைப் பயன்படுத்த வேண்டுமானால், அதை முடிந்தவரை குறைவாகப் பயன்படுத்துவதே இவர்களின் செயல்முறை. பெரும்பாலும் உள்ளூர் கட்டிட நுட்பச் சூத்திரத்தில் உருவான மண்கலவைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'அறிவுப்பரிமாற்றம் எல்லா திசைகளிலும் செல்கிறது. எங்கெல்லாம் அதைப் பெற முடியுமோ அங்கெல்லாம் நாங்கள் பெற்றுக்கொள்ளத் தயங்கவில்லை' என்கிறார்கள் இந்நூலகத்தின் கட்டுமானப் பணிகளை ஒருங்கிணைத்த தன்னார்வ அமைப்பினர். இயற்கைச்சூழலுடன் தொடர்புடைய கட்டுமானப்பொருட்கள் சார்ந்த ஒரு விரிவான ஆராய்ச்சிக்குப் பிறகு, கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான முக்கியப் பொருளாக அழுத்திநெருக்கப்பட்ட மண் செங்கற்களை (CEB) பயன்படுத்த முடிவுசெய்தனர். அதிர்ஷ்டவசமாக, 15 வருடங்கள் தூசிபடிந்து கிடந்த **2 CEB** இயந்திரங்களை அப்படியே நாங்கள் தேடிக் கண்டுபிடித்தோம். இந்த இயந்திரங்கள் **29x14x9cm** அளவில் மண்கற்களின் தொகுதிகளை உற்பத்தி செய்கின்றன, அவை முயிங்காவின் வடக்கில் கிடைக்கும் செங்கற்களுடன் மிகவும் ஒத்தவை, அவை சுடப்படவில்லை என்பதைத் தவிர. நான்கு பேர் தொடர்ந்து கற்களை உற்பத்தி செய்தனர், ஒரு நாளைக்கு 1100 கற்கள் வரை இந்த இயந்திரங்களால் அழுத்தி உருவாக்கப்பட்டது.

கூரையை ஆதரிக்கும் சுமைதாங்கி விட்டங்கள் அனைத்தும் யூகலிப்டஸ் மரத்தால் ஆனவை, அவை முயிங்காவின் அருகில் உள்ள முரம்பாவில் தொடர்ச்சியாக அறுவடை செய்யப்படுகின்றன. யூகலிப்டஸ் மரம் மண்ணில்





அமிலத்தை அளிக்கிறது, இதனால் மற்ற தாவரங்கள் வளரவிடாமல் தடுக்கிறது. எனவே, புருண்டி மலைகளில் இதைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த தெளிவான வனமேலாண்மை தேவை. அதிகபலம் மற்றும் வேகமான வளர்ச்சி ஆகிய இயல்புகளால், இடைவெளிகளை விரிவுபடுத்துவதற்கும் கட்டுமான மரமாகப் பயன்படுத்துவதற்கும் யூகலிப்டஸ் ஒரு சிறந்த தீர்வாகும்.
மேற்கூரை மற்றும் தரை ஓடுகள் முயிங்காவின் சுற்றுப்புறத்தில் உள்ள ஒரு உள்ளூர் பணிமனையில் தயாரிக்கப்பட்டன. ஓடுகள் நியமாசோ பள்ளத்தாக்கு களிமண்ணால் சூளையில் சுடப்பட்டு உண்டாக்கப்பட்டவை. கட்டுமான இடத்திலிருந்து 3 கி.மீ தூரத்தில் உள்ள நியமாசோ பள்ளத்தாக்கிலிருந்த இந்த 'களிமண்' அதன் தூய்மை மற்றும் விலைமலிவு காரணத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது. வெந்த பிறகு, அவற்றின் நிறம் அழகான இளஞ்சிவப்பு நிறத்தில், செங்கற்களைப் போன்ற அதே அளவிலான வண்ணத்தில் மாறுகிறது. நூலக வடிவமைப்பில் ஒவ்வொரு கூரை மேற்பரப்பும் சுமார் 1400 ஓடுகளைக் கொண்டுள்ளது. வழக்கமாக, இறக்குமதி செய்யப்படும் வளைந்த இரும்புத்தகரங்களை மாற்றியமைக்கிறது இக்கூரைகள். மேலும் உள்ளூர் பொருட்கள் கூரையின் உள்கட்டமைப்பிற்கான முக்கிய வடிவமைப்பு கூறுகளாக கருதப்பட்டது.
உள்ளூர் மூங்கில்கள் கட்டுமானத் தரத்தில் இருக்கவில்லை, ஆனால் சிறப்பான உட்கட்டமைப்பு வடிவமைப்பு (ஐவெநசழைச னநளபைெ) செயல்பாடுகள் மற்றும் விளக்குகளுக்கான தாங்கு-அமைப்புகள் உருவாக்க மூங்கில் சரியான தேர்வு. புருண்டியர்கள் மற்றும் பெல்ஜியர்களுடனான ஒரு கூட்டுப்பட்டறையில், சில மூங்கில்-நெசவு நுட்பங்கள் ஆராயப்பட்டன, இறுதியில், நூலகத்திற்குள் விளக்குகள் பொருத்துவதற்கு மூங்கில்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டன. மூங்கில் இன்றியமையாத ஒரு கலைப்பொருள் ஆதாரவளம். தாழை இழைகளிலிருந்து நார்க்கயிறு தயாரித்தல் இந்த நூலகத் திட்டத்தில் மலர்ந்த சிறிய, நுண்ணிய, கிராமப் பொருளாதாரங்களில் ஒன்றாகும். அதற்கு முன்பாக இந்த மரபுநுட்பம் இப்பகுதியில் வணிககவனம் பெறவில்லை. தாழைநார்க் கயிறு நெசவு செய்யும் நுட்பத்தில் முயிங்காவைச் சுற்றியுள்ள பகுதியில் தேர்ந்தவரான ஒரே ஒரு பெரியவரைக் கண்டுபிடிக்க நிறைய முயற்சி எடுத்தனர் நூலகக்குழுவினர். ஒருவழியாக அவரைக் கண்டுபிடித்தனர்.

அவர் உள்ளூரில் தாழைநார்களை அறுவடை செய்து கயிறுகளை நெசவு செய்யத் தொடங்கினார். அவர் மேலும் 4 தொழிலாளர்களுக்கு நெசவைக் கற்பித்தார், அவர்கள் இப்போது இந்த நுட்பத்தில் தேர்ந்தவர்களாக செயல்படுகின்றனர். மேலும் அவர்களின் வாழ்வாதாரத்தைப் பெறுவதற்கான தொழிலாகவும் இதை திறமையாகப் பயன்படுத்துகிறார்கள். இந்தக் கயிறுகளால் பின்னப்பட்ட தொங்கு - ஊஞ்சலால் நூலகத்தின் இரட்டை - அறை உயரத்தின் நடுவில் வலுவாகக் கட்டப்பட்டது. குழந்தைகள் விளையாட, ஓய்வெடுக்க மற்றும் வாசிப்பதற்கான தனிச்சிறந்த இடமாக இந்த 'தாழைநார் தொங்குவலை' செயல்படுகிறது. முயிங்காவின் ஒரு மலைக்கிராமத்தின் நடுவில் கட்டப்பட்டுள்ள இந்த நூலகம், உள்ளூருக்கும் உலகத்திற்குமான ஒரு கல்வியாலயம் போல செஞ்சாந்து நிறத்தில் நிலப்புழுதி படிந்து எழுந்துநிற்கிறது. வாசிப்புக்கான வாசல்களோடு..

# சனாதிபதியின் ஒரே நாடு ஒரே சட்டம் சொல்வதென்ன?

- செம்பருத்தி -

புதிய அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையைச் சனாதிபதி கோத்த பாய ராஜபக்ச கடந்த 2020-08-20 அன்று நாடாளுமன்றத்தில் நிகழ்த்தி யிருந்தார். அதில் அவர் நாட்டின் பொருண்மிய வளர்ச்சி, கல்வி என்று பலவற்றைக் கூறியிருந்தார். இது வழக்கமாக ஒவ்வொரு முறையும் கொள்கை விளக்க உரையாற்றுபவர் கூறும் கருத்துகளே. யார் சனாதிபதியாக வருகிறாரோ, அவர் தனது கட்சியின் நிலையில் நின்று இவ்வாறு உரை யாற்றுவது என்பது புதுமையல்ல. அதுபோல் பெரும்பான்மை இனத்தவரே சனாதிபதியாக வரக்கூடிய நிலையில் அப்பதவிக்கு வரும் அனைவரும் தமது இனம், மொழி பற்றி அதிக அக்கறையைத் தமது கொள்கை விளக்க உரையில் வெளிப்படுத்துவது வழக்கமே. ஆனால் இம்முறை சனாதிபதி இனம், மதம் சார்ந்த அறிவிப்புகளைக் கொஞ்சம் அழுத்தமாகவே கூறியுள்ளார்.

“எமது நாட்டு அரசியலமைப்பின் பிரகாரம் எனது பதவிக்காலப் பகுதியில் நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதாகவும் ,பௌத்த சாசனத்தைப் பாதுகாத்து வலுப்படுத்தவும் நான் உறுதி அளிக்கிறேன். அதற்கேற்ப அரச நிர்வாகத்திற்காக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நான் முன்னணிப் பௌத்த பிக்குமார்கள் கொண்ட ஆலோசனைச் சபை ஒன்றை அமைத்துள்ளேன். அதேபோன்று தொல்பொருள் பெறுமதி வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்கும், எமது புத்த மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நான் விசேட செயலணி ஒன்றை அமைத்துள்ளேன். பௌத்த சமயத்திற்கான முன்னுரிமையை உறுதி செய்யும் அதே நேரத்தில் இந்த நாட்டில் எந்த ஒரு பிரஜையும் தாம் விரும்பும் சமயத்தைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம் மிகச் சிறப்பாகப் பாதுகாக்கப்படும்.” என்று சனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

மதம் பற்றி இவ்வாறு கூறிய சனாதிபதி புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவது பற்றியும் கூறியுள்ளார். புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற்கு முன்னர் இப்பொழுது உள்ள பத்தொன்பதாவது திருத்தம் நீக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். புதிய அரசியலமைப்புக் கொண்டு வரும்போது இந்தப் பத்தொன்பதாவது திருத்தம் இல்லாமல் போகும் என்ற நிலையிருந் தும், அவசர அவசரமாகப் பத்தொன்பதா வது திருத்தத்தை நீக்கப் போவதாக அவர் அறிவித்துள்ளார். முன்னாள் சானதிபதியே தற்பொழுது பிரதமராக இருக்கிறார். அவர் இன்றைய சனாதிபதி யின் உடன் பிறந்தவர். எனவே சனாதிபதியும், பிரதமரும் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களாக அதுவும் சகோதரர் களாக இருக்கும்போது, அவசர அவசரமாகப் பிரதமருக்குக் கொடுக்கப் பட்ட அதிகாரங்களைப் பறிப்பது எதனால் என்று புரியவில்லை? பத்தொன்பதாவது திருத்தம் என்பது பிரதமருக்குச் சில கூடிய அதிகாரங்களை வழங்கியிருந்தாலும் நிறைவேற்று அதிகாரம் குறைவடையா மலே உள்ளது. சில ஆணைக்குழுக்கள் நியமனத்தில் மட்டுமே நாடாளுமன்றத் திடம் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் , அதை முற்றாக நீக்க அவசரப்படுவது எதற்காக என்பது புரியாமலே இருக்கிறது! இந்த அவசர முயற்சியை, 1970 இல் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கு முன்னரே மூதவையை (ஸுநுயேவுநு) இல்லாமல் செய்த நடவடிக்கையோடு ஒப்பிடலாம். அன்று,



இலங்கை நாடாளுமன்றமானது , இரு அவைகளைக் கொண்டிருந்தது. அதில் ஒன்று மக்கள் பிரதிநிதிகள் சபை (**House of Representative** ) மற்ற அவை மேலவை அல்லது மூதவை என்றும் அழைக்கப்பட்டன. நேரடியாகத் தேர்தல் மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அவையையே மக்கள் பிரதிநிதிகள் சபையாகும். ஆனால் மக்கள் பொதுவாக நாடாளுமன்றம் என்று இதைக் கூறி வந்துள்ளனர். அது தவறான கூற்றாகும். மூதவைக்கு அரைவாசிப் பேர் தேசாதிபதியாலும், மிகுதி அரைவாசிப்பேர் மக்கள் பிரதிநிதிகள் சபையாலும் நிரப்பப்படுவர் . புதிய அரசியல் யாப்பைக்கொண்டு அந்த மேலவையை இல்லாமல் செய்யாமல் தனது பலத்தைக் கொண்டு அரசியலமைப்புத் தயாரிப்பதற்கு முன்னரே நாடாளுமன்றத்தில் சட்ட மூலம் கொண்டு வந்து நிறைவேற்றிய பின்னர் மேலவையை நீக்கினர். அதுபோன்று தான் இப்பொழுது பத்தொன்பதாவது திருத்தத்தை நீக்க முடிவு செய்துள்ளார்கள். கையில் மூன்றில் இரண்டுப் பெரும்பான்மையை வைத்திருப்பதால் இவ்வாறு செய்ய முடிகிறது. ஆனால் இந்த அவசரம் ஏன் ? என்பது தான் புரியாமல் உள்ளது.

சனாதிபதி இதற்குப் பின்னர் “நாம் கோரிய மக்கள் ஆணை கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய புதிய அரசியலமைப்பு ஒன்று கொண்டுவரப்படும்.இதன் போது “ஒரே நாடு,ஒரே சட்டம் என்ற எண்ணக் கருவுக்கு முதலிடம் கொடுக்கப்படும்.” என்று பேசியுள்ளார். முதலில் பௌத்தத்திற்கு முன்னுரிமை, புத்த பிக்குமாரின் ஆலோசனை பெற்று அரச நிர்வாகத்தைக் கொண்டு போவது எனக் கூறிய சனாதிபதி இப்பொழுது “ஒரே நாடு ஒரே சட்டம்,” என்று கூறியுள்ளார். இந்த நாட்டிலே இரு மொழி பேசும் மக்கள் வாழ்கிறார்கள். இந்த நாட்டிலே பௌத்த, இந்து அல்லது சைவ ,கிறித்துவ கத்தோலிக்க , இசுலாமிய நெறிகளைப் பின்பற்றும் மக்கள் வாழ்கிறார்கள். இந்நிலையில் எவரும் தனக்கு விரும்பிய மதத்தை பின்பற்றுவதற்கு உரிமையுடை யவர்கள் என்று கூறிய சனாதிபதி, பௌத்தத்திற்கான முன்னுரிமையை உறுதிப் படுத்துவதாகவும் கூறியுள்ளார்.

புத்த பிக்குமாரின் ஆலோசனையின்படி அரசு நிர்வாகம் என்றால் அதன் பொருள் என்ன?மாமன்னர் அசோகனைப் பார்த்துப் “போர் கொடுமையானது. போர் செய்ய வேண்டாம். அன்பும் கருணை யும் கொண்ட ஆட்சியை அமையுங்கள்.” என்று புத்த பிக்குகள் கூறியது போன்று. அன்று நடந்த போரில் மக்கள் அழிந்து போனதைக் காட்டி “அன்பும் கருணையும் கொண்ட ஆட்சி நடத்துங்கள்” என்று கூறுவார்களா? அல்லது “முழுப் பௌத்த நாடு இலங்கை. பௌத்த சிங்கள மக்களுக்கே சொந்தம்.” என்று கூறுவார்களா ? இங்கே தான் சனாதிபதியின் உரையைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அவர் எதனை அடிப்படையாக வைத்துக் கொண்டு இவ்வாறு கூறியுள்ளார்?

அடுத்தது அவர் கூறியது “ஒரே நாடு , ஒரே சட்டம்” என்ற கூற்றாகும். “புதிய அரசியலமைப்பைத் தயாரித்து அமுல்படுத்த மக்கள் ஆணை தந்துள்ளதாகவும், அதற்கமைய அமைவுள்ள அரசியலமைப்பில் “ஒரே நாடு, ஒரே சட்டம்” என்ற விடயம் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் கூறியுள்ளார். இரு பெரும் இனங்கள் இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். இன்று நேற்றல்ல, வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே தமிழினம் இந்த நாட்டில் வாழ்ந்து வருகிறது. சிங்கள இனம் விஜயன் வந்த பின்னரே தோன்றிய இனம் என்று தான் மகாவம்சம் கூறுகிறது. எனவே அவனின் வருகைக்கு முன்னரே இங்கு வாழ்ந்த இனம் தமிழினம் என்பது தான் உண்மை. ஆனால் தற்பொழுது தமிழினம் வடக்குக் கிழக்கு என்ற தாயகத்தைக் கொண்ட தேசிய இனமாக வாழ்ந்துகொண்டிருக்கிறது. அம்மக்கள் புதிய அரசியல் யாப்புத் தயாரிக்க வேண்டும் என்று பொதுசன பெரமுன வின் கோரிக்கையை ஏற்கவில்லை. வடக்கில் தமிழ் மக்களிடம் நேரடியாக வந்து ,வாக்குக் கேட்கவில்லை. கிழக்கிலும் மக்கள் ஆணை வழங்கவில்லை. இந்நிலையில் சிங்கள இனம் வழங்கிய ஒப்புதலை முழுத் தமிழினமும் கொடுத்ததாகக் கூறுவது தவறாகும். இவ்வாறே 1970 தேர்தலிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற சிறிமாவோ “தனக்கு புதிய அரசியல் யாப்புத் தயாரிப்பதற்காக மக்கள் ஆணை கிடைத்து விட்டதாகக் கூறினார். ஆனால் தமிழ் மக்கள் அவ்வாறு ஆணை எதுவும் கொடுக்கவில்லை என்றும், சமஷ்டி ஆட்சியொன்றைக் கொண்டு வருவதற்கே தமிழ் மக்கள் ஆணை வழங்கி யுள்ளதாகத் தந்தை செல்வா அன்று கூறியிருந்தார்.அது தான் உண்மை யாகும். இன்றும் அதே நிலைமையே தான் உள்ளது. இதைத் தான் கஜேந்திரகுமார் தனது உரையில் நாடாளுமன்றத்தில் வைத்துக் கூறியுள்ளார். அங்கஜனோ,டக்ளசோ தாங்களும் தமிழ்த் தேசியத்திற்காகவே உள்ளோம் என்று தான் வாக்குக் கேட்டார்கள், புதிய அரசியல் யாப்புப் பற்றிப் பேசவில்லை என்பதையும் குறிப்பிட்டுப் பேசியுள்ளார்.


அது மட்டுமல்ல அவர்கள் கூட ராஜபக்சாவின் கட்சியில் தேர்தலில் போட்டிடவில்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டியதே என்றும், தனித்தே போட்டியிட்டார்கள் என்றும் சுட்டிக்காடியுள்ளார்.

சனாதிபதியின் உரையைப் பார்த்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர “சனாதிபதி பல அடிகள் பின்னோக்கிப் பாய்ந்து விட்டார்” எனக் கூறியுள்ளார். முன்னாள் அமைச்சரும் எதிர்க்கட்சிக் கொறடாவுமான லக்ஸ்மன் கிரியெல்ல “சனாதிபதியின் ஒரே நாடு ஒரே சட்டம்” என்ற விடயம் அமுல்படுத்தப்பட முடியா தது ஒன்று என்றே குறிப்பிட்டுள்ளார். உண்மையில் சனாதிபதி இவ்வாறு கூறியதன் உண்மைப் பொருளைப் பலரும் கண்டுகொள்ளவில்லையோ! அல்லது தமிழர் தரப்புப் புரிந்து கொள்ளவில்லையோ! என்று தான் நினைக்கத் தோன்றுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மண்ணை ஓரளவு பாதுகாத்துக் கொண்டிருக்கும் தேசவழமைச் சட்டத்தை நீக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால் ஏற்பட்ட கடும் எதிர்ப்பினால் அது கைவிடப்பட்டது. இப்போது ஒரே சட்டம் என்று கூறிக்கொண்டு அதனை நீக்க வழி காணப்படுவதாகவே நினைக்கத் தோன்றுகிறது.

அதேபோல் இசுலாமியர்களுக்கு என்றும் சில தனியான சட்டங்கள் உள. அவற்றையும் நீக்கி “ஒரே நாடு ஒரே சட்டம்” என்ற கோட்பாட்டுக்குள் கொண்டு வருவதே சனாதிபதியின் நோக்கமாகும். இது பற்றித் தான் லக்ஷ்மன் கிரியெல்ல “இலங்கையில் பல மொழி,பல இனங்கள் வாழ்கின்றமையினால் சனாதிபதியின் கொள்கை விளக்கப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளதைப் போன்று “ஒரே நாடு ஒரே சட்டம்” என்பதனை அமுல் படுத்த முடியாது. ஒரே நாடு ஒரே சட்டம் என்று சனாதிபதி கூறியுள்ளார். இதனை எப்படிசெய்ய முடியும்?எனக் கேட்கிறேன்.குற்றவியல் சட்டங்கள் உள்ளிட்ட எல்லாருக்கும் பொதுவான சட்டங்கள் இருக்கிறதைப் போன்று தனியார் சட்டங்களும் உள்ளன.குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு தேசவழமைச் சட்டம் இருப்பது போல் மலை நாட்டில் “உடரட்ட சட்டம்” இருக்கிறது. அதேபோன்று கீழைத்தேய ரோமானிய “லந்தேசி சட்டம்,” மற்றும் “முஸ்லிம் சட்டங்கள்” இருக்கின்றன. இச்சட்டங்களை இல்லாமல் செய்ய முடியுமா?கண்டியச் சட்டம் அதாவது மலை நாட்டுச் சட்டம் 1500 வருடங்களுக்கு மேலானது. இவை தனிப்பட்ட சட்டங்களே. இதனை மாற்ற முடியுமா ? இவற்றை இல்லாமல் செய்ய முடியுமா?” என்று கேள்வி எழுப்பியிள்ளார் கிரியெல்ல.

இதை நோக்கும்போது கண்டியச் சிங்கள மக்கள் ஒரே சட்டம் என்பதை எவ்வாறு எதிர்பார்ப்பார்கள் என்பது தெரியவில்லை அதேபோல் தான் இசுலாமிய மக்களின் நிலையும். இங்கே கவனிக்கப்பட வேண்டியது ஓர் இசுலாமியரே நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதாகும்.தேசவழமை நீக்கத்திற்கும் எதிர்ப்பு எழும் என்று நம்பலாம். ஆனால் மூன்றில் இரண்டு பெரும் பான்மையையும் பௌத்த சிங்கள மேலாண்மைச் சிந்தனையை கொண்ட ஆட்சி.ஒரே நாடு அது பௌத்த நாடாகவே இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மக்கள் அனைவருக்கும் ஒரே சட்டம் என்று தான் அமுல்படுத்த முனையும்..

# செயற்கை நுண்ணறிவு




எழுத்துருவாக்கம் : ப. ராஜ்குலன்

உலகிலுள்ள மனித மூளை ஆராய்ச்சியாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர் ஜெஃப் ஹாக்கின்ஸ் (Jeff Hawkings). அவர் மனித மூளை ஆராய்ச்சியாளர்களின் எளிதில் புரியப்படாத ஆராய்ச்சி முடிவுகளைச் சுயமாகக் கற்றறிந்து கொண்டதாகக் உறுதி கூறியவர். மேலும் ஆராய்ச்சி முடிவுகள் அனைத்தும் இணைந்து உருவாகும் முழுமை குறித்த ஆழ்ந்த புரிதல் உள்ளவர்.

ஹாவ்கின்ஸின் அறிமுகச் சான்றுகள், அவரது அபரிமிதமான ஆக்கத் திறனையும் இயல்பான நுண்ணறிவையும் சுட்டிக்காட்டி நம்மை மலைக்க வைக்கின்றன. அவருடைய ஒன் இன்ரெலியன்ஸ் (On Intelligence) மதிப்புரைகள் ஒவ்வொன்றும் "ஹாக்கின்ஸ் ஒரு சிறந்த தொழில் முனைவர், கணினி நிபுணர், Palm Computing மற்றும் Handspring என்கிற இரு குழுமங்களின் நிறுவனர்" என்ற உயர்த்தும் குறிப்புகளுடன் தொடங்குகின்றன. இவர்; Palm Pilot, Treo ஸ்மார்ட் போன் மற்றும் சில சாதனங்களைக் கண்டுபிடித்தவர், அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலும், எவரும் எளிதில் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளும் விதத்திலும் தொழில்நுட்பத்தை அமைத்துத் தருவது அவருக்குக் கைவந்த கலை. அவருடைய எழுத்துக்களும் அவ்வாறானவையே !

"On Intelligence" என்னும் நூலில், ஹாக்கின்ஸ், "மூளை எவ்வாறு செயல்படுகிறது, நுண்ணறிவு இயந்திரங்களை எவ்விதம் உருவாக்கிக் கொள்ள முடியும்," என்பன பற்றிய புதிய கோட்பாட்டை அறிமுகப்படுத்துகிறார். பல தசாப்தங்களாக, இயந்திர நுண்ணறிவே, கணினி அறிவியலின் இலக்காகக் கருதப்பட்டு வருகிறது என்பது உண்மை. தொண்ணூறு களில், செயற்கை நுண்ணறிவின் உண்மை நிலை வெளிப்பட்டது, பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் செயற்கை நுண்ணறிவென்னும் வார்த்தைப் பிரயோகங்களை முற்றிலும் தவிர்த்தார்கள். இருப்பினும், செயற்கை நுண்ணறிவுத் துறை வலுவான அடித்தளத்துடன் நிச்சய வளர்ச்சி கண்டது. துணி துவைக்கும் இயந்திரங்களில் தெளிவில்லா தர்க்கச் சில்லுகள் (Fuzzy Logic Chips) பொருத்தப்பட்டன, தானியங்கித் திட்டமிடல் முறைமைகள் (Automatic Planning Systems), நாசாவின் Mars Rovers போன்றவை விண்வெளி ஆய்வுகளை மேற்பார்வை செய்கின்றன. நிபுணர் அமைப்புகள் (Expert Systems) வங்கிகளில் கடன் பெறும் பயனாளி தீர்மானிக்கப் பயன்படுத்தப் படுகின்றன.

உருவகை ஏற்பு (Pattern Recognition) செய்வதில் நரம்பணு வலையமைப்புகள் (Neural Networks) வெற்றியடைந்திருக்கின்றன. ஆனாலும் இன்று பொறிக் கற்றலில் (Machine Learning) நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு, எண்ணியல் நியமத்தின்படி (Digital Law) பல செயற்கை நுண்ணறிவு வழிமுறைகள் (AI Algorithms) சாத்தியமாகியிருந்த போதிலும், செயற்கை நுண்ணறிவை மட்டுமே பயன்படுத்தி, குற்றேவல் புரிகின்ற அல்லது குழந்தைகளைப் பராமரிக்கின்ற எந்திரன்களை (Robot) உருவாக்கிக்கொள்ள முடியாது என்பது தெளிவாகி இருக்கிறது. இருப்பினும் எதிர்காலத்தில் எதுவும் சாத்தியமாகலாம்.

20 ஆம் நூற்றாண்டின் மத்தியில், சில அறிவியல் ஆராய்ச்சி யாளர்கள், நரம்பியலின் சமீபத்திய கண்டுபிடிப்புகள், தகவலின் ஒரு புதிய கணிதவியல் கொள்கை, தன்னாள்வியல் என்று அழைக்கப்படுகின்ற, கட்டுப்பாடு மற்றும் நிலைப்புத்தன்மையைப் புரிந்துகொள்ளுதல், இவை எல்லாவற்றுக்கும் மேலாக, மனிதனின் கணிதவியல் பகுத்தறிதல் செயலைச் செய்யக்கூடிய வகையில் உருவாக்கப்பட்ட எண்ணியல் கணினியின் கண்டுபிடிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நுண்ணறிவு இயந்திரங்களை உருவாக்குவதற்கான புதிய அணுகுமுறைகளைத் தேடத் தொடங்கினர்.

செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence) என்பது இயந்திரங்களின் நுண்ணறிவு மற்றும் இதனை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட கணினி அறிவியலின் ஒரு பிரிவாகும். பெரும்பாலான AI உரை நூல்கள் இத்துறையினை "நுண்ணறிவுக் கருவிகளைப் பற்றிப் படித்தல் மற்றும் வடிவமைத்தல்" என வரையறுக்கின்றன. இதில் நுண்ணறிவுக் கருவி என்பது, தன் சூழ்நிலையை உணர்ந்து, அதிக வெற்றி வாய்ப்புகளுக்குத் தக்கவாறு செயலில் ஈடுபடும் ஒரு அமைப்பாகும். ஜான் மேக்கர்த்தி என்பவர் 1956 இல் இந்தச் சொல்லை அறிமுகப்படுத்தி இதனை "நுண்ணறிவு இயந்திரங்களை உருவாக்கும் அறிவியல் மற்றும் பொறியியல்" என வரையறுத்தார்.

காலப் பயணம் (Time Travels) பற்றிய தமிழ்த் திரைப்படங்களின் காலமிது என்பதால் அதிலிருந்து தொடங்கலாம். கால எந்திரம் ஒன்றில் பயணித்து 1750களில் வாழும் மனிதர் ஒருவரைப் பிடித்து 2020க்குக் கூட்டி வந்து இன்றைய உலகைக் காணச் செய்தால் என்ன ஆவார்? 'வந்தியத்தேவன், குதிரை மேல் ஏறினால் வாயு வேகம், மனோ வேகத்தில் பயணித்தான்' என்று படித்தாலும் ஓரளவு நம்பத்தக்க விதமாக கண்முன்னே குதிரை மேல் பயணம் செய்வதே அதிவேகப் பயணமாக அவர் கண்டிருப்பார். இன்றோ வானில் சீறிப் பாயும் விமானங்களும், அறியப்பட்ட நம் சூரிய குடும்பத்தின் எல்லையைத் தாண்டியே சென்று கொண்டிருக்கும் வாயேஜர் செயற்கைக் கோளும்! புறா விடு தூது அனுப்பிய செய்திகள் சில பல நாட்களுக்குப் பிறகு நெஞ்சைக் கவர்ந்தவரை அடைந்த நிலைமைக் குப் பழகியவர், அதற்கு மாறாக கடலுக்கு அப்பால் வாழும் அன்பு மனைவியோடு காயலையில் (Skype), புலவளாவியில் (Viber), புலனத்தில் (WhatsApp) முகம் பார்த்தபடி உரையாட முடிவது, நேரடியாகக் காதால் கேட்ட ஒரு கலைஞனின் இசையை, நினைவுகளில் மட்டுமே மீட்டியெடுத்து மகிழ்வதற்குப் பதிலாக, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கலையகத்தில் (Studio) இசைக்கப்பட்ட 'அன்னக்கிளி உன்னைத் தேடுதே' என்ற பாடலை, விரலளவுக் கருவியின் மூலம் நுணுக்கமாக மீண்டும் மீண்டும் கேட்டு மகிழ முடிவது எல்லாம் அதனாற்பட்ட பயனே. ஆங்கிலத்தில் 'Mind is Blowing' என்று ஒரு உயர்வு நவிற்சி உண்டு.

காலத்தில் பயணித்த அம் மனிதர், ஆச்சரியங்கள் தாள முடியா மல் மெய்யாகவே சிந்தை வெடித்துச் சிதறி இறக்கவும் வாய்ப்புண்டு.

இப்போது அடுத்த கேள்வி : இன்றைய உலகில் வாழும் நம்மில் ஒருவர், அதே கால எந்திரத்தில் ஏறி முன்னோக்கி எத்தனை ஆண்டுகள் பயணித்தால், அதே போன்று சிந்தை சிதறும் ஆச்சர்யங்களை அடைவார்? அதற்கு 'முன்னூறு ஆண்டுகள்' என்று உங்களில் யாராவது பதில் சொல்லியிருந்தால்.... நீங்கள் வெல்ல முடியாது. காரணம், நீங்கள் நினைத்திருக்க வேண்டியது முன்னூறு ஆண்டுகள் நெடில் அல்ல, முப்பதே ஆண்டுகள் குறில். இதற்கு முக்கிய காரணமாக இருக்குமென்று பரவலாக அறிவியலாளர்கள் மத்தியில் நம்பப்படுவது, செயற்கை நுண்ணறிவுப் (Artificial Intelligence) புலத்தில் வர இருக்கும் புரட்சிகள். அல்லது, நடைபெற்றுக் கொண்டிருக்கும் புரட்சிகள் என்பதே உண்மையாம்.

செயற்கை நுண்ணறிவு என்பது, கவிப்பேரரசு அளித்த தெளிவுரைப்படி (எந்திரன் திரைப்படத்தில் எந்திரனின் அறிமுகப்பாடல்) "எஃகை வார்த்து சிலிகான் சேர்த்து, வயரூட்டி உயிரூட்டி, ஹார்ட்டிஸ்கில் நினைவூட்டி, அழியாத உடலோடு, வடியாத உயிரோடு, ஆறாம் அறிவை அரைத்து ஊற்றி, ஏழாம் அறிவை எழுப்பும் முயற்சி". சுருக்கமாகச் செயற்கை அஃறிணைகளுக்கு, அதாவது மனிதர்கள் உருவாக்கிய எந்திரங்களுக்கு, குறிப்பாக கணினிகளுக்கு, அறிவேற்றுவது. இந்தத் துறைக்கு செயற்கை நுண்ணறிவு எனப் பெயரிட்டவராக ஜான் மெக்கார்த்தி (John McCarthy, 1927 - 2011) அறியப்படுகிறார். எம்.ஐ.ரி. (MIT) மற்றும் ஸ்டான்ஃபோர்ட் (Stanford) பல்கலைக்கழகங்களில் ஆய்வும் கற்பித்தலும் என்ற துறையைச் சேர்ந்தவர். 1955ல், ஐ.பி.எம். (IBM) நிறுவனத்தில் ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு ராக்கஃபெல்லர் அமைப்பிடம் உதவி வேண்டிச் சமர்ப்பித்த திட்ட வரைவில், "செயற்கை நுண்ணறிவு சார்ந்த இந்த ஆய்வில், மனிதர்களால் செய்யக் கூடிய அறிவாற்றல் சார்ந்த (தொடர்ந்து விரைவாகக் கற்பது உள்ளிட்ட) எந்த அம்சத்தையும் ஒரு எந்திரம் செய்யக் கூடிய வகையில் தெளிவாக வரையறுத்து விளக்கிவிட முடியும் என்ற கருதுகோளின் அடிப்படையில் தொடர இருக்கிறோம்.." என்று அவர் எழுதுகிறார் .




உலக உயிரினங்களில் ஆறாவது அறிவை அடைந்த ஒரே உயிரினம் என்று தம்மைத்தாமே நம்பிக் கொள்ளும் மனிதர்கள், கவுண்ட மணியின் பாஷையில் சொல்லப்போனால், "அவன் ரொம்ப அறிவாளியாம்!" "அப்படியா? யார் சொன்னது?" "அவனே சொல்லிக் கொண்டான்" என்று வரும்.

இந்தச் செயற்கை நுண்ணறிவைப் பற்றி ஆராயத் தொடங்கியபோது, அதை எப்படி நிகழ்த்துவது என்பது ஒரு கேள்வியாக இருந்தது. முதல் படியாக மனிதர்களைப் போல நடந்து கொள்ளும் எந்திரங்களை உருவாக்கத் தொடங்கினார்கள். **(Machines Mimicking Human Behavior)** ரோபோ என்று மனித வடிவிலேயே இருக்கும் எந்திரங்(ன்)கள், இதில் அடக்கம்.

அடுத்தபடியாக மனிதர்களைப் போல சிந்திக்கும் எந்திரங்களின் உருவாக்கம். **(Machines Mimicking Human Thought Process)** ஆப்பிள் ஐஃபோன்களில் ஒலிக்கும் 'சிரி', **(SIRI)** மற்றும் மைக்ரோ சொப்டின் "கொர்தானா" **(Corthana)** இத்தகைய செயற்கை நுண்ணறிவு என்று ஓரளவு சொல்லலாம். குரல் தவிர வேறு எந்த விதத்திலும் 'மனிதத் தன்மையற்றது' அது. தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம் – உள்ளதை உள்ளபடி விருப்பு வெறுப்பின்றி சொல்லும் என்பதால்.

தற்போது மனித அறிவின் விரிவுகளும் எல்லைகளும் பற்றிய மயக்கங்கள் விலகிக் கொண்டிருக்கும் நிலையில் அதற்கடுத்த கட்டமாக நுண்ணறிவோடு இயங்கும் எந்திரங்களை உருவாக்க முயற்சிப்பது. **(Machines With Intelligence. Dot.)** இது எப்படி இருக்கும் என்பது அது வந்தால் தான் தெரியும்.

செயற்கை நுண்ணறிவில், அது எந்த அளவு நிபுணத்துவம் அடைந்துள்ளது என்பதை வைத்து மூன்று வகைகளுண்டு. முதலாவது செயற்கைக் குறு நுண்ணறிவு **(Artifical Narrow Intelligence)** இது பலவீனமான செயற்கை நுண்ணறிவு **(Weak AI)** எனவும் அழைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டும் நிபுணத்துவம் வெளிப்படுத்துவது. இருபதாண்டுகளுக்கு முன்பாகவே, அப்போதைய உலக சதுரங்க முதன்மையாளன் **(Chess Champion Casbarrow)** காஸ்பரோவை ஒரு போட்டியில் வீழ்த்திய ஐ.பி.எம் டீப் புளூ **(IBM Deep Blue)** என்ற கணினி இந்த வகையானது எனலாம். அந்தக் குறிப்பிட்ட துறையில் மட்டுமே மேலும் மேலும் படித்தும், பயிற்சிகள் செய்தும் தன்னை முன்னேற்றிக் கொள்வது இதன் பணி. வேறு துறைகளில் கவனம் செலுத்தாது. "கணிதத்தில் மட்டும் என் பையன் சூரப் புலி, ஆனால், மற்றப் பாடங்கள் எதிலும் கவனம் எடுக்கிறானில்லை" என்பது போன்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகும் மாணவனைப் போன்றது இந்த நிலை..

இரண்டாவது, செயற்கைப் பொது நுண்ணறிவு **(Artifical General Intelligence)**. இது வலுவான நுண்ணறிவு **(Strong AI)** எனவும் அழைக்கப்படுகிறது. ஒரே சமயத்தில் பல்வேறு துறைகளில், அறிவார்ந்த செயல்பாட்டை வெளிப்படுத்துகின்ற கணினிகளை இப்படிச் சொல்லலாம். மனித அறிவுக்கு 'சபாஷ், சரியான போட்டி இது' என்று சவால் விடக்கூடியது. குறிப்பாக, தர்க்கபூர்வமான சிந்தனை, திட்டமிடுவது, திட்டப்படி செயல்படுவது, வேகமாகப் புதியன கற்பது, தெளிவற்ற அல்லது வரையறையற்ற கருத்தோட்டங்களை **(Abstract Ideas)** எளிதாகப் புரிந்து கொள்வது, இப்படி இவையும் இன்னும் பலவுமாக, ஒரு மனிதன் ஈடுபடக் கூடிய அறிவார்ந்த செயல்பாடுகளில் இயங்கக் கூடியதாக இந்த வகைக் கணினிகள் இருக்கும்.

எல்லாப் பாடங்களிலும் உயர் மதிப்பெண்கள் பெறும் மாணவர்களைப் போன்றது இது. ஆனால், இந்த இரண்டாம் வகை செயற்கை நுண்ணறிவை அடைவது கடினமான ஒன்று. இன்னும் முழுமையாக எட்டப்படவில்லை. ஆனால், அந்தத் தருணத்தை மிக விரைவில் எதிர்நோக்கி இருக்கிறோம்.

மூன்றாவது, செயற்கை அதி நுண்ணறிவு **(Artifical Super Intelligence)**. நாமறிந்த எல்லாத் துறைகளிலும், இருப்பதிலேயே சிறந்த மனித மூளைகளை மிஞ்சும் அறிவு கொண்ட நிலை இது. அறிவியல் சார்ந்த துறைகள் மட்டுமின்றி, கலை, சமூக நடத்தை, நிர்வாகம், என்று எல்லாமே இதில் அடக்கம். பாடங்களில் சோபிப்பது மட்டுமில்லாமல், விளையாட்டிலும் இன்னும் பல கல்விசாரா நடவடிக்கைகளிலும் பட்டையைக் கிளப்பும் மாணவர்கள் இருப்பார்களல்லவா, அவர்கள் தான் இது.

செயற்கைப் பொது நுண்ணறிவு நிலையையே இன்னும் எட்டவில்லை என்பதால் செயற்கை அதி நுண்ணறிவு நிலை, அதற்கடுத்து எதிர்காலத்தில் இருக்கிறது. இப்போதைக்கு, "எப்போது வரும்? எப்படி வரும்? என்பது தெரியாது, ஆனால் வரவேண்டிய நேரத்தில் நிச்சயமாக வரும்." என்று சொல்லலாம்.

குரங்கினத்தை விடப் பரிமாண வளர்ச்சியில் மனித இனம் முன்னேறி விட்டோம் என்று நாம் சொல்லும் போது, அதன் பொருள் என்ன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். மனிதர்கள் செய்யக் கூடிய விடயங்களைக் குரங்குகள் செய்ய முடியாது என்ற அளவில் மட்டும் இயங்குவதில்லை இந்த பரிணாம வளர்ச்சி. மனிதர்கள் கணினியை உருவாக்கினால், குரங்குகளால் உருவாக்க முடியாது தான். ஆனால், மனிதர்களால் கணினி என்ற ஒன்றை உருவாக்க முடியும் என்பதைக் கூடக் குரங்குகளால் புரிந்து கொள்ள இயலாது. இது போன்ற பல பரிமாணங்கள் இதில் அடங்கி உள்ளன.



அதைப் போல், செயற்கை அதி நுண்ணறிவு என்பது, பரிமாண வளர்ச்சித் தொடரில், மனிதனின் அறிவாற்றலை மிஞ்சப் போகும் அடுத்த பாய்ச்சலாக இருக்கப் போகிறது. அது மட்டுமல்லாமல், மனிதர்களுக்கும், முந்திய ஐந்தறிவு விலங்கினங்களுக்கும் இடையிலான இடைவெளியை விட மிகப் பெரிய இடைவெளியைச் செயற்கை அதி நுண்ணறிவு அதிவிரைவில் எட்டிச் சென்று விடும் என்று நம்பப்படுகிறது.

எனவே தான், என்ன? ஏது? என்று நம்மால் புரிந்து கொள்ளக் கூட முடியாத பரிமாணங்களில் இந்த அதி நுண்ணறிவு வெளிப்படக் கூடும். அதன் விளைவுகள் எப்படி இருக்கும்? மனித இனம் செல்லும் பாதை எதிர்காலத்தை நோக்கியா? அல்லது 'அதிர்'காலத்தை நோக்கியா? என்பது நமக்கு முன்னாலுள்ள சவாலான கேள்வி.

இன்னும் பல நுண்ணிய தகவல்களுடன் அடுத்த இதழில் தொடரும்...

# காற்று வாக்கிலே....

# தேரர்கள் மகாத்மியம்...!







அண்மைக்காலமாக வெகுஜன ஊடகங்கள் பலவற்றிலும் பௌத்த தேரர்கள் தொடர்பான பல்வேறு செய்திகள் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. அரசியல் விடயங்களில் தேரர்கள் மேற்கொண்டு வரும் அதிரடி செயற்பாடுகளும், விடுத்துவரும் அறிவிப்புகளும் மட்டுமல்லாது பொது விடயங்களிலும் தமது கருத்தியல் பங்களிப்புகளை வழங்கத் தயாரான நிலையில் அவர்கள் உள்ளனர். என்பதும் சுவாரஷ்யமான விடயம்தான். இவ்வாரம் தேரர்கள் குறித்த ஊடகச் செய்திகள் சிலவற்றை தொடர்ச்சியாக படிக்கவும், கேட்கவும் நேர்ந்ததால் அவற்றை அனைவருடனும் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெருமளவிலான பௌத்த சிங்கள மக்களின் பேராதரவுடன் கோத்தாபய ராஜபக்ஷ அவர்கள் பெரிய அளவிலான வெற்றியைப் பெற்றவுடன், அவர் இது பௌத்த சிங்கள மக்களுக்கு கிடைத்த மகத்தான வெற்றி எனவும், இந்த நாடு ஒரு முழுமையான பௌத்த சிங்கள நாடென்பதை இந்தத் தேர்தல் நிரூபித்துள்ளதாகவும், கோத்தாபய ராஜபக்ஷ தரப்பின் பேரினவாத தலைவர்களும், பௌத்த தேரர்களும் வெற்றிக் கோஷம் எழுப்பியபோதே அரசாங்கம் அத்தகையோரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்ட தென்றே கூறவேண்டும்.

புதிய ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் உடனடியாகவே பௌத்தத்திற்கு முதலிடம் என்ற கொள்கையை உரத்துப் பிரகடனம் செய்யத் தொடங்கியுள்ள பௌத்த சிங்கள பேரினவாத அமைப்பு கள், குறிப்பாக பௌத்த தேரர்கள் தலைமை தாங்கும் அமைப்புகள், சிறுபான்மையினத்தவர் கள் மீதான தமது காழ்ப்புணர்வையும், எதிர்ப்புணர் வையும் வெளிப்படையாகவே காட்டத் தொடங்கியுள்ளனர்.

"சிறுபான்மை இனத்தவர் இனிமேல் உரிமைகள் பற்றிப் பேசவே கூடாது" என பொதுபலசேனா போன்ற அமைப்புகள் மிக வெளிப்படையாகவே இனவாதத்தை கக்கத் தொடங்கின எனலாம். தேரர் களுக்கு புதிய ஜனாதிபதி கொடுத்த மரியாதையையும், கௌரவமும் உச்சிக்கு ஏற அவர்கள் புத்த தர்மத்தை போதிப்பதை விடவும், அரசியல் ஞானோபதேசத்தை அடிக்கடி பகிரங்கமாகவே சொல்ல ஆரம்பித்த போது, புதிய ஜனாதிபதி மீதான சிறுபான்மை சமூகத்தவரின் எதிர்பார்ப்புகள் மெல்ல மெல்லத் தகர்ந்து போக ஆரம்பித்தது. அதற்கேற்ப ஜனாதிபதியின் தீர்மானங்களும், நடவடிக்கைகளும் கூட சிறுபான்மை இனத்தவரைப் பல்வேறு வகையில் பாதிப்பதாக இருந்ததும் குறிப்பிடத்தக்கதே...

அரசு பௌத்தத்திற்கு முதலிடம் என வெளிப்படையாகப் பிரகடனம் செய்த போதே இலங்கை, அதாவது ஸ்ரீலங்கா ஒரு சோஷலிசக் குடியரசு என்று கூறிக் கொள்ளும் தகுதியை இழந்துவிட்டது என்பதே உண்மை. பௌத்தத்திற்கு முதலிடம் எனக் கருதிக் கொண்டத னாலோ என்னவோ, அரச நிர்வாகத்தின் சகல துறைகளுக்குள்ளும் தேரர்களின் கருத்தியல் ஆதிக்கம் கோலோச்சத் தொடங்கிவிட்டது. ஆசீர்வாதம் செய்ய வேண்டிய தேரர்கள், அதிகாரம் செய்பவர்களாகத் தம்மை நினைத்துச் செயற்படத் தொடங்கியது என்பது இந்த நாடு சந்திக்கப்போகும் எதிர்கால நெருக்கடிகள் குறித்த எச்சரிக்கை சமிக்ஞைகளை காட்ட ஆரம்பித்தது எனலாம்.

கடந்த நல்லாட்சி அரசாங்கம் என்ற நாமத்தைத் தமக்குத் தாமே சூட்டிக் கொண்ட மைத்திரி - ரணில் அரசாங்கம் வீழ்ச்சியைச் சந்தித்தமைக்கான எத்தனையோ காரணங்கள் அரசியல் ரீதியாக இருக்கையில், பௌத்தமதத்தை புறக்கணித்தமையே அவ்வரசின் இன்றைய வரலாற்று வீழ்ச்சி நிலைக்குக் காரணம். பௌத்த சிங்கள மக்களின் ஆதரவுப் பலத்துடன் மட்டுமே இந்த நாட்டில் பலமான ஒரு அரசை அமைக்க முடியும் என்பதை இன்றைய பொதுஜன பெரமுன ஆட்சி நிரூபித்துள்ளது என முப்பீட ஐக்கிய பிக்குகள் முன்னணி என்ற அமைப்பின் அநுநாயக்கரான மதுரட தம்மாலங்கார என்ற பிக்கு தெரிவித்துள்ளார்.

அது மட்டுமல்ல துறவிகளான பௌத்த தேரர்களுக்குள்ளேயே அரசியல் "முரண்பாட்டு" அணிகள் பல இருக்கவே செய்கின்றன என்பதை ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசின் பின்னடைவுக்கு அவருக்கு ஆலோசனைகளும் - ஆசிகளும் வழங்கிய பௌத்த பிக்குகளும் மூல காரணம் என்று அதே தேரர் சொல்லி யிருக்கிறார். பௌத்த சாசனத்திற்கு உரிய மதிப்பு அளிக்கப்படாமையே முன்னைய அரசின் தோல்விக்குக் காரணம்." என அரசியல் ஆய்வொன் றினை அந்தத் தேரர் வெளியிட்டுள்ளார். அத்துடன் படுதோல்வியைச் சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை சஜித் பிரேமதாஸவுக்கே வழங்கப்பட வேண்டும்." எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இங்கே தேரரின் குரலில் தொனிக் கும் இறுமாப்பைப் புரிந்துகொள்ள வேண்டும். ஓர் அரசை உருவாக்கவும் மற்றொரு அரசை நிர்மூலமாக்கவும் பிக்குகளால் முடியும். அவர்களே இந்த நாட்டின் ஆட்சி பீடத்தைத் தீர்மானிக்கும் மாபெரும் சக்தி என்ற இறுமாப்பு தேரர் களின் குரலில் ஒலிப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதே சமயம் ஐ.தே.கட்சியின் பிக்குகள் முன்னணி யின் பிரதம செயலாளரான தினியவெல பாலித்த தேரர் இதே விடயம் தொடர்பாக என்ன கருத்தை முன்வைக்கிறார் என்று பார்க்கலாம்.

"கடந்த 26 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்த ரணிலால் எதுவும் செய்யமுடிய வில்லை. அவர் எடுத்த பிழையான முடிவுகளே அவரது இன்றைய நிலைக்கு காரணம். இது பற்றி அவருடன் தனியாகப் பேசினோம். எம்மால் கையளிக்கப்பட்ட ஒரு மகஜரை அவர், போபிட்டிய தேரரின் முகத்தில் வீசி எறிந்தார் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். அவரால் இனி எதிர்காலத்தில் பத்து தேரர்களின் ஆதரவைக் கூடப் பெறமுடியாது. மகிந்தாவுடன் இப்போது 14000க்கும் அதிகமான தேரர்கள் அணி திரண்டுமுள்ளனர். அவர் தேரர்களை கௌரவப்படுத்துகின்றார்" எனக்கூறியுள் ளார். ஆசைத் தீர்மானிக்கும் சக்தி தாங்கள் தான் எனக் கர்வம் கொள்ளும் தேரர்களின் உட்கட்சி அரசியல் மோதல் களும், முரண்பாடுகளும் இன்னும் சுவையானவை. இம்முறை பொதுத் தேர்தலில் பிக்குகளின் மக்கள் சக்திக் கட்சிக்குத் தேசியப் பட்டியல் மூலம் ஒரே ஒரு ஆசனம் கிடைத்தது. அவ்வளவு தான் அந்த ஒரு நாற்காலியைத் தமதாக்கிக் கொள்ள மூன்று தேரர்கள் மோதிக் கொள்வதுதான் வேடிக்கை. இந்த முரண்பாட்டு மோதல்களுள் நடைபெறும் சம்பவங்கள் நகைச்சுவை யாக மட்டுமல்லாது, நகைப்புக்கிடமான வையாகவும் உள்ளன.

இந்த மோதல்கள் பௌத்த மதக்கொள்கைகளையும், பௌத்த மக்களையும், தேரர்களையும் அவ மதிப்பதாக உள்ளது என நாம் கூறவில்லை. தெற்கு பௌத்த பீட பிரதான சங்க நாயக்கரான ஓமல்பே சோபித தேரரே கூறியுள்ளார். அதுமட்டுமல்லாது - மகாநாயக்க தேரர்களுக்கு பௌத்த சாசனத்துக்கு அமைய வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் இனியாவது அவர்கள் இவ்விடயத்தில் அக்கறைகாட்ட வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அடுத்தவர் பொதுபலசேனாவின் பெரிய தேரர் ஞானசாரர் கூறுவதைக் கேளுங்கள். "பௌத்த மக்களின் தேசிய உரிமைகளைப் பாதுகாக்க முன்னெடுத்த தேசிய திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுப்போம். இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இந்த நாட்டிலிருந்து முழுமையாக இல்லாதொழிக்கும் சட்டங்களை இயற்றவே எமது கட்சிக்கு கிடைக்கப் பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கிறோம்..." (இது எப்படி இருக்கிறது?) என்று உரத்து அறிவித் துள்ள ஞானசார தேரர் பற்றி ரத்னசார தேரர் என்பவர் சொன்ன வற்றை பார்க்கலாம் - அண்மையில் அபே ஜனபல வேகய என்ற பிக்குகள் கட்சியின் பொதுச் செயலாளரான வெதினிகம விமல திஸ்ஸ தேரர் வசிக்கும் விகாரையில் தங்கியிருந்த அரம்பொல ரத்னசார தேரர் இனந்தெரியாத குழுவினரால் கடத்தப்பட்டதாக வெளிவந்த செய்தி குறித்து ரத்ன சாரர், "பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரே என்னைக் கடத்தியவர் அவருடன் எங்கள் கட்சித் தலைவரும் கூட இருந்தார்... எங்கள் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் விடயம் தொடர்பாகவே நான் கடத்தப்பட்டு துப்பாக்கியால் தாக்கப்பட்டேன். அதனால் எனக்கு காயமும் ஏற்பட்டது. அத்துடன் என்னிடம் கொழும்பில் மேலும் பல இடங்களில் தடுத்து வைப்பதற்காக கட்சி செயலாளர்கள் குறித்தும் விசாரித்தனர். என்று கூறியுள்ளார். (என்ன வில்லத் தனம் கட்டுறாங்க... டோய்)

சரி... அதுவும் போகட்டும். ஞானசார தேரரை ஏமாற்றித் தண்ணி காட்டி விட்டு, தேசியப் பட்டியல் ஊடாக தான் பாராளு மன்றம் நுழைவதற்கு அத்துரெலிய ரத்ன தேரர் சூழ்ச்சி செய்கிறார் என சிங்களே தேசிய அமைப்பு, என்ற கட்சி தெரிவித்துள்ளது. இவர் இரவில் பிக்குகள் கட்சித் தலைவருடன் தேர்தல் ஆணைக் குழு உறுப்பினர் ரத்ன ஜீவன் ஹூலு டன் ரகசியச் சந்திப்பை நிகழ்த்தியுள்ளன ராம்... இந்த அரசியல் கோமாளித் தனத்தை அதுரலிய ரத்ன தேரர் உடனடியாக நிறுத்த வேண்டும்" எனவும் அந்த கட்சி தெரிவித்துள்ளது. (அட... என்ன சதித்திட்டமெல்லாம் போடு றாங்கப்பா....!?) ஆனால் அதுரெலிய ரத்ன தேரர் என்ன சீற்றம் சீறுகிறார் பாருங்க... எமது கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர் நியமனம் தொடர்பாக அதிகம் பேசப்பட்டு வரும் நிலையில், நான் தலைமறைவாகி காணாமல் போய் உள்ளதாகவும், நான் தேடப்பட்டு வருவதாகவும் ஊடகங்கள் பொய்யுரைக்கின்றன... ஊடகங்களால் தான் எல்லாப் பிரச்சினையும்" (என்னமாய் பிளேட்டை திருப்பிப் போடுகிறார் பாருங்கள்...!?)

மேற் கண்ட செய்திகள் எல்லாம் அரசியல் தேரர்கள் பற்றியது, ஆனால் இந்தச் செய்தியே ஒரு வித்தியாசமான தேரர் பற்றியது. இன்றைய ஆளும் கட்சியுடன் மிக நெருக்கமான தொடர் புடையவர் என்று கூறப்படும் பிரபல்ய மான பிக்குவான பெங்கமுனே நாலக தேரர் என்பவர் என்ன சொல்கிறார் தெரியுமா? அதாவது, கஞ்சா பயிர்ச் செய்கைக்கு இலங்கையானது மிகவும் பொருத்தமான நாடாம்! எனவே அப்பயிர்ச் செய்கையை ஊக்குவிக்க அதனை பயிரிட விரும்புவோருக்கு அரசாங்கமானது உரிய அனுமதியை வழங்க வேண்டுமாம்.(போதையூட்டும் செய்திதான்..!)

அதாவது தேசிய மருத்துவ ஊக்கு விப்பு, ஆயுள்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெய கொடியின் அலுவலகத்தில் நடந்த ஒரு நிகழ்விலேயே அவர் இந்த "அற்புதமான" வேண்டுகோளை விடுத்துள்ளார். "கஞ்சா ஒரு அருமருந்து. எமது நாட்டில் விளையும் கஞ்சா மிகவும் உயர்தரமானது.

அதனை கைப்பற்றும் பொலிஸார் அதனை தீயிட்டு கொளுத்துவது பெருந்தவறு, நமது நாட்டில் தான் இப்படியான முட்டாள் தனமான வேலைகள் நடக்கின்றன. என்று அவர் அறிவு பூர்வமாகச் சிந்தித்து பேசியுள்ளார். இலங்கை கஞ்சாவின் மகிமை பற்றி இவருக்குத் தெரிந்த அளவுக்கு மற்றவர்களுக்கு தெரியவில்லையே...!



இராஜகோபால் என்ற இயற்பெயருடைய செம்பியன் செல்வன் 01 சனவரி 1943 தொட்டு 20 மே 2005 வரை வாழ்ந்த ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவர்.பேராதனைப் பல்கலைக் கழக புவியியல் சிறப்புப்பட்டதாரியான இவர் விவேகி சஞ்சிகையின் இணையாசிரியராக இருந்தவர். செம்பியன் செல்வன் யாழ்ப் பாணம், தின்னவேலியில் பிறந்தவர். இவருக்கு சிறு வயதிலேயே பெற்றோரை இழந்தார். தாய்வழிப் பாட்டி நாகமுத்து இவரையும் இவரது தமையன் கணேசபிள்ளையையும் வளர்ந்தார். நாவல், சிறுகதை, நாடகம், உருவகம், குறுங்கதை, திரைப்படம், சஞ்சிகை என இலக்கியத்தின் பல்வேறு பிரிவுகளிலும் தனது ஆளுமையினைப் பதித்தவர் செம்பியன் செல்வன். தனது தனிப்பட்ட வாழ்வில் ஒரு ஆசிரியராக, அதிபராகக் கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.நாட்டுப் பற்றாளர் என்ற கௌரவத்தைப் பெற்றவர்.

# இதயக் குமுறல்

**- செம்பியன் செல்வன் -**

"மகனே!"
"உன்னை மகனே என்று வாய்விட்டழைக்க முடியாத பாவியாக இருந்து விட்டேனடா என் கண்ணே! என் உணர்ச்சிகளை... உள்ளத் துடிப்புகளை... எல்லாம் ஒன்றாக்கி அழைக்கிறேன்!"
"மகனே!"
"என் இதயம் அலறுவதை உன்னால் புரிந்துகொள்ளவும் முடியாது! என் அன்பு அழைப்பு... இதயதாபம்... எல்லாம் பாமும் பெருவெளியில் மோதிக்கலந்து உருச்சிதைந்து போவதையும் என்னால் பொறுக்க முடியவில்லையே!"
"மகனே!"
"அன்புக்கு மணமில்லை... நிறமில்லை... உருவமில்லை... ஆனால்? உயிருண்டுடா மகனே! உணர்ச்சி உண்டு... என் உயிரின் புலம்பலை நீ புரிந்து கொள்ளமாட்டாயா?"
"அக்கா! நான் போயிட்டுவாறன்!" என்று விடை பெறுகிறாய் உன் மனைவி சகிதம்!
நான் என்னை மறந்துவிடுகிறேன்! வெறிகொண்டவளாகி விடுகிறேன்! நான்!
"அக்கா" வா?
"அம்மா" வா?
"அக்காவும் அம்மாவும் ஒன்றா"
இரண்டிலும் ஒரே ரத்தம் ஆனாலும், தோன்றிய வழி வேறல்லவா? வழி வேறானால் முறை வேறாகிறது முறை வேறாக... பாசம் சிதறுகிறது! பாசத்தின் "பொருள்" மழுங்குகிறது! வானக் கருமையிலே ஒரு புள்ளி நட்சத்திரம் நிலைகொள்ளாமல் தவிக்கிறதே!
நானும் நட்சத்திரமும் ஒன்றாகிறோமா!
என் தவிப்பைப் புரிந்துகொள்ளாத ஜடமாகிறாயா நீ?
"மகனே!"
என்னைப் போன்ற பாவி இந்த உலகத்திலே தோன்றவே வேண்டாமடா! மகனே! என் கதை எல்லாவற்றையும் உன்னிடம் சொல்லி உன் அன்பைப் பெற நினைக்கிறேனடா! உன் வாயால் "அம்மா" என்ற அமுத மொழி என் காதில் விழுந்து என்னைக் குளிர வைக்க வேண்டுமென்று துடிக்கிறேனடா... ஆனால்... சத்தியம்?
"சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு அன்னை என்ற உரிமையிழந்து தவிக்கும் என்னைப் புரிந்துகொள்ள மாட்டாயா மகனே?"
அப்போது...
எனக்குப் பதினைந்து வயதிருக்குமா? இல்லையில்லை... அதனைவிட ஒரிரு வயது குறைவாகவே தான் இருந்திருக்கும்...
நான் அந்த இளவயதிலேயே மலர்ந்து விட்டேன்...!
காலமில்லாக் காலத்திலே பூக்கும் மலர்களுக்கு அசாதாரண கவர்ச்சியும் எழிலும் உண்டல்லவா? நானும் மலரும் ஒன்றாகிறோமோ? வெறும் சதைக் கோளங்களாலும் ரத்தத்தாலும் சதை நார்களாலும் அமைக்கப்பட்ட என் உடலுக்கு இவ்வளவு கவர்ச்சியும் எழிலும் எப்படி வந்தன? ஏன் வந்தன?
பெண்களுக்கு அழகு அவசியம் என்கிறார்கள்! பித்தர்கள், காமுகர்கள்!



சிந்தனையற்ற அறிவிலிகள்!
பெண்ணின் அழகு! மலரின் அழகு! மானின் அழகு!
எல்லாமே ஆபத்துக் கருவிகள்! அழகற்றிருப்பதே பெண்மைக்குக் கவசம். அழகான பெண்ணைக் கண்ட மனிதன் அவளை உடலாற் கற்பழிக்காவிட்டாலும், மனதால் கற்பழித்துவிடுகிறானே!
என் அழகைக் கண்டு என் தோழியரே கிறக்கம் கொண்டார்கள் என்றால்...
அப்போது... என் ஐயா... அது தான் நீ ஐயா என்று அழைக்கிறாயே! அவர் உண்மையில் உன் தாத்தவடா! நீ அவர் மகனில்லையடா! நீ அவர் பேரனடா கண்ணே! அவர் கண்டியில் வேலையாக இருந்தார். நான் கண்டி "கொன்வென்"டில் படித்துக் கொண்டிருந்தேன். என்னிடம் மேலைநாட்டு நாகரிகம் முதிர்ந்திருந்தது. அந்த நாகரிகம் "சோஷியல்" என்ற பெயரில் அரக்க உருவெடுத்திருந்தது.
மனிதன் நாகரிக முதிர்ச்சி என்ற பெயரில் தன் "பரிணாம வளர்ச்சி"யின் ஆரம்பகாலத்திற்குச் சென்று கொண்டிருக்கிறானா?
என் வீட்டுக்கு பக்கத்தில்தான் "அவர்" இருந்தார். அவர்தான் உன் தந்தையடா மகனே தந்தை!
"தந்தையா?" என்று சீறாதே மகனே! அவர் தன் கடமையைச் செய்யாவிட்டாலும், அவர்தானே உனக்கு உயிரும் உருவும் கொடுத்தவர்!
அவர் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார். விடுமுறையின் போதெல்லாம் வீட்டிற்கு வந்து விடுவார்! நான் அவர் வருகையைப் பார்த்துக் கொண்டே இருப்பேன். என் பாட சம்பந்தமான சந்தேகங்களைப் போக்க.
அவரிடம் நான் முதலில் பாட சம்பந்தமாகச் சென்று பேசியபோது அவருக்கு வியப்பேற்பட்டிருக்க வேண்டும். ஆனால் எனக்குத்தான் "சோஷியல்" என்ற பெயரில் இதெல்லாம் பழக்கமானதாயிற்றே.
அவர் பாடங்களை விளக்கிச் சொல்லித் தரும்போது அவரையே பார்த்துக் கொண்டிருப்பேன். அவர் அறிவின் ஆழத்தை, கூர்ந்த மதியை மனதுக்குள் வியந்துகொள்ளுவேன். அவர் பாடத்தை விளக்கிச் சொல்வது போல் எங்கள் "கொன்வென்ட்" மிஸ் கூடத் தெளிவாகப் பாடம் சொல்லமாட்டா.
அப்புறம்... அப்புறம் என்ன? கொன்வென்டில் நடக்கும் நிகழ்ச்சிகள் எங்கள் சந்திப்புகளுக்கு சந்தர்ப்பமளித்தன. கொன்வென்டில் "கொன்சேட்" என்றுவிட்டு பேராதனைப் பூங்காவிற்குச் சென்றுவிடுவோம். தோழிகளைச் சந்திக்கச் செல்வதாகக் கூறிவிட்டுக் கண்டி ஏரியை வலம் வருவோம். கண்டியில் "லேக்ரவுண்ட்" வருவது மாலைநேரப் பொழுது போக்கோடு பாஷனும் கூடவடா மகனே!
மாதங்கள் சில கழிந்தபின்... ஒரு நாள்...
வெள்ளிக்கிழமை, உனது தாத்தாவும் பாட்டியும் கண்டிப் பிள்ளையாரைத் தரிசிக்கச் சென்றிருந்தார்கள். மாலை மங்கிக்கொண்டிருந்தது. நான் மட்டும்தான் வீட்டிலிருந்தேன்.
அந்நேரம் பார்த்து உன் தந்தையும் எங்கள் வீட்டிற்குள் புகுந்தார். ஒருநாளும் எங்கள் வீட்டிற்குள் வராதவர் வந்திருக்கிறார். அப்பா அம்மா இல்லா நேரம் பார்த்து.
எனக்கு ஏதோவொரு நிலை, உள்ளம் பதற... உடல் நடுங்க... கண்ணிமைகள் படபடக்க... இதழ்கள் துடிக்க... அவரை வரவேற்கக்கூட என் வாய் எழவில்லை.
உன் தந்தை என்னருகே நெருங்கி வந்தார். மாலைப்பொழுது இருண்ட கூடம் - தனிமை- காதலர்.
இருளும் தனிமையும் கொடிதா? வலிதா?
"அருள்" வேண்டச் சென்ற உன் தாத்தாவும் பாட்டியும் வீடு திரும்பும் போது,
"இருள்" வீட்டில் சூழ்ந்து விட்டதை அவர்கள் உணரவில்லை.
உன் பாட்டி- என் அம்மா- கர்ப்பம் தரித்தார்கள்! நானும் உன்னைத் தரித்தேன்!
காலமும் உண்மையும் நெருங்கிய நண்பர்கள். ஒருவரை ஒருவர் காத்து நிற்பவர்கள்! உண்மைக்குத் திரைபோட முடியுமா? அந்தத் திரையைக் காலம் கிழிந்தெறிந்து விடாதா?
ஒரே வீட்டில்.
தாயும் மகளும் மகப்பேற்றிற்காகக் காத்திருக்கும் பேரதிசயம் எங்கள் வீட்டில்தான் நிகழ்ந்தது. திடீரென உன் தந்தை.
அந்தர் தியானமாகிவிட்டார்.
எங்கள் வீட்டில்-
வாய்கள் மூடிக்கொண்டன.
ஆனால்... இதயங்கள் எரிமலையாகிக் குமுறுகின்றன! வாய் திறந்து ஆத்திரத்தைக் கக்கமுடியாத திருடனுக்கு தேள் கொட்டின நிலை... வெளியே தெரிந்தால்... அவமானம்- இழிவு - இளக்காரம்...!
உன் அப்பா- என் தந்தை என்னையும் அம்மாவையும் அழைத்துக்கொண்டு கொழும்புக்கு வெளியேறுகிறார்...
பரபரப்பும் சந்தடியும் நிறைந்த கொழும்பு மாநகரில் எம்மைக் கவனிப்போர் யாருமிலர்... அப்படிக் கவனித்தாலும் நின்று விசாரிக்க யாருக்குப் பொழுதிருக்கிறது...
நானும் அம்மாவும் ஒரே ஆஸ்பத்திரியில்

அனுமதிக்கப்படுகிறோம்...
அம்மாவுக்குப் பிரசவமாகி,
குழந்தையும் உடனேயே
இறந்துவிடுகிறது...
என் அருகே நீ குஞ்சுக்
கரங்களையும் கால்களையும்
அசைத்து மெல்லப் புரள்கிறாய்...
உன் ஸ்பரிச உணர்ச்சி என்னைச்
சிலிர்க்க வைக்கிறது... உன்
பஞ்சுடலை என் கரங்கள் வருடி
அதன் மென்மையை ரசிக்கின்றன...
அப்போது...
நீள்வது கடற்சிலந்தியின் கோரக்
கரங்களா...?
உன்னை வாரியணைத்து எடுத்துச்
சென்று என் அம்மாவின்
படுக்கைக்கருகே காணப்பட்ட
சின்னஞ்சிறு தொட்டிலில் இடுகிறார்
என் தந்தை... எனக்கு எல்லாமே
புரிந்துவிடுகிறது.
"ஐயா! என்றலறிவிடுகிறேன்.
"பிள்ளை... நான் சொல்லுறதைக்
கொஞ்சம் கவனமாகக் கேள்.
உன்ரை பிள்ளையை அம்மா
தன்ரை பிள்ளையாக வளர்க்கட்டும்...
இது உன்ர பிள்ளை எண்டு
வெளியில் தெரிஞ்சா எவ்வளவு
மானக்கேடு... நாங்க தெருவில
தலையைக் காட்ட முடியாது...
மேலும் உன்ரை உடலும் எவ்வளவு
பலவீனமா இருக்கு. நீ எப்படிக்
குழந்தையை வளர்ப்பாய். நாம்
திரும்பவும் கண்டிக்குப் போகேக்க
அம்மா தன்ரை பிள்ளை எண்டாக்
கேள்விக்கு இடமிருக்காது. நெடுக நீ
இப்படி இருந்திடுவியே. உனக்கொரு
கலியாணத்தைச் செய்து போட்டா
எல்லாம் சரியாய்ப் போயிடும்."
"ஐயா! என்னைக் கொல்லாதீர்கள்.
என்னவும் செய்யுங்கள். எனக்குக்
கலியாணம் எண்ட பேச்சை மட்டும்
எடுக்காதீங்கள் ஐயா" என்று
கும்பிடுகிறேன்.
"அப்ப உன் பிற்கால வாழ்வு?"
"நான் டீச்சராகப் போறேனய்யா!"
கண்ணீரைத் துடைப்பவர்... "பிள்ளை!
நீ எனக்கொரு சத்தியம் செய்து
தரவேண்டும்" என்கிறார்.
" என்ன சத்தியம்...?"
"என்ன தான் நேர்ந்தாலும் இவனுக்கு
நீதான் தாயென்பதைச்
சொல்லமாட்டேன். இவனுக்கு
"அக்கா"வாக மட்டுமேதானிருப்பேன்
எண்டு சத்தியம் செய்."
"அப்படியே நான் ஒருபோதும் என்ர
மகன் என்று சொல்லமாட்டேன் ஐயா"
தலையணையில் முகத்தைப்
புதைத்துக்கொள்கிறேன்.
தலையணை ஈரமாகிறது.
பிறப்புப் பதிவில் நீ என் தந்தையின்
மகனாகிறாய்.
பேரன் மகனானால்...?
மகள்...? ஐயோ. இதென்ன
அபச்சாரம்...
நீ பாலுக்காக அழும்போதெல்லாம் என்
மார்பகங்கள் விம்முகின்றன...
வேதனையாக குடைகின்றன.
உன்னை வாரியணைத்து
அமுதூட்டத் துடிக்கிறேன்... ஆனால்...
அம்மா வாரியணைத்து
பாலூட்டுகிறாள். என் மார்பகங்கள்
நனைந்துவிடுகின்றன... மனதுக்குள்
அழுகிறேன்...
காலமும் மெதுவாக நகர்கின்றது...
என் இதய தாபமும் அதிகரிக்கின்றது...
என் நிலையுணர்ந்து என் தாபத்தைத்
தீர்க்க - என் தந்தையறியா வண்ணம்
நடுநிசியில் உன்னைத் தூக்கிவந்து
என்னருகே கிடத்துகிறாள்... நான்
உன் இதமான அணைப்பில் என்னை
மறக்க... நீயோ... விழிப்புக் கண்டு
கத்தத் தொடங்குகிறாய். அம்மா வந்து
உன்னைத் தூக்கிச் செல்கிறாள்.
என் மனம் சூத்திர பூமியாகிறது.



இப்படி எத்தனையோ நாட்கள்
நீ வளர்ந்து விடுகிறாய்... நீ "அக்கா...
அக்கா..." என்று என் முன்னால் ஓடி
வரும்போதெல்லாம் எனக்கு ஆத்திரம்,
கோபம், கையாலாகாத்தனம்..
எல்லாம் வருகிறது... உண்மையைச்
சொல்லிவிடலாமா...? என்று
துடிக்கிறேன்... ஆனால்... உண்மை
கொடிதா...?
உன் இதயத்தை அந்த உண்மை
கசக்கிப் பிழிந்துவிட்டால்...
அதன் தாக்கத்தை உன் பிஞ்சு இதயம்
தாங்க முடியாமல் சிதறிவிட்டால்...
என்னைப்பற்றிய தவறான- நச்சு
அபிப்பிராயத்தை உனக்கு
ஊட்டிவிட்டால்...
அதனால் என்னை வெறுத்து
ஒதுக்கிவிட்டால்...
மனதுக்குள் "ஹோ!" என்று
அழுகிறேன்.
ஒருநாள்...
உன் தோழி என்று ஒருத்தியைக்
கொண்டு வந்து
அறிமுகப்படுத்துகிறாய்...
நான் திடுக்கிட்டு விடுகிறேன்...
எவ்வளவு துணிச்சல் உனக்கு...
இக்கால வாலிபனல்லவா... ? இந்தத்
துணிச்சல் உன் தந்தைக்கு
அன்றிருந்திருந்தால்...
"தம்பி! என்று மெதுவாக
அழைக்கிறேன்... என் பார்வையின்
அர்த்தம் புரிந்து கொண்ட நீ குறும்புச்
சிரிப்புடன், என்னைப் பார்க்கத்
துணிவின்றி தலையைக்
குனிந்துகொள்கிறாய்...

"அக்கா!" என்று அன்புடன் கூறிக்
கொண்டே வந்து என் கரங்களை
ஆதரவுடன் உன் தோழி
பற்றுகிறாள்...
நான் அதிர்கிறேன்.

"அக்கா" உன் குரலின் எதிரொலி...
மகனின் மனைவிக்கு அக்கா.
மாமியாரா...? மச்சாளா...?
என் வாழ்வில் ஒரேயொரு முறை
ஏற்பட்ட வழுக்கல் ஏன் இப்படி
பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து
வரவேண்டும்... "பெண்மை"
வழுக்கிவிட்டால்...
மகன் தம்பியாக!
மகனின் மனைவிக்கு அக்காவாக
நாளை...
மகனின் மகனுக்கு...
பாட்டியா..?
மாமியா...?
மகனே உன்னைத்தான் மகன் என்ற
உரிமை பாராட்டிக் கொள்ள
முடியாவிட்டாலும்... உன்
மனைவியைக் கூடவா "மருமகள்"
என பாராட்டிக் கொள்ளக்கூடாது...?
மாமியாக நின்று மருமகளை
மணவறைக்கு அனுப்பவேண்டிய
நான்...!
உன் திருமணம் முடிந்துவிடுகிறது...!
என் கண்களில் ஆனந்தக் கண்ணீர்
பனிக்கிறது...! மகனே...! உன்
திருமணக் காட்சியைக் கண்டது தான்
என் வாழ்வின் இன்பத்தின்
எல்லையடா, கண்ணே!
இதற்காகத்தான் இவ்வளவு காலம்
காத்திருந்தேனடா, என் செல்வமே...!
அதனையும் கண்டு
களித்துவிட்டேன்...! இந்த
மகிழ்ச்சியோடு உன்னிடம் நான்
விடைபெறுகிறேனடா...!
இனியும் நான் இங்கே இருந்தேன்
என்றால் என்னையே அடக்க
முடியாமல் உண்மையைச் சொல்லி
உன் வாழ்க்கையை சீர்குலைக்க
நேரிடும்...! இதுவரை நீ என் தம்பி
என்ற பெயரில் இருந்தாய்...! ஆனால்
இன்றோ....?

புது வாழ்க்கையில் காலடி பதிக்கும்
ஒரு குடும்பத்தலைவன்...! கப்பலை
வழி நடத்திச் செல்லும் மாலுமி.
வாழ்க்கை செவ்வனே நடைபெற மன
அமைதி மிக மிக முக்கியம்.
அமைதியில்லாவிட்டால்...?
மாலுமி கலங்கினால், கடலில் கப்பல்
செல்லுமா...?
மகனே...! நான் கேட்டிருந்த
இடமாற்றம் கிடைத்துவிட்டது...! இனி
நான் இலங்கையின் எங்கோ ஒரு
மூலையில் உன் நல்வாழ்வுக்காகப்
பிரார்த்தித்துக் கொண்டே வாழ்ந்து
விடுவேன்...! இந்த அன்புள்ளத்தை
நீயும் உன் சந்ததியும் மறந்து
விட்டாலும், நான் உன்னை உன்
குடும்பத்தை மறக்கவே மாட்டேன்...!
கடைசி முறையாக உன்னை
வாய்விட்டு... என் தாபம் தீர,
அழைக்கிறேன்...



## தொடங்கி விட்டது நாடாளுமன்றம்




## எம்மவர் எமக்காக என்ன செய்யப் போகிறார்கள்?

வைரமுத்து கொஞ்சம் மரியாதை வைத்திருந்த கஜேந்திரகுமாரின் முன்னணிக்குள்ளும் களேபரமாம். என்ன நடக்கிறது இந்த நாட்டில்? எனக்கு இந்த விடயங்கள் எல்லாம் அத்தனை ஆரோக்கியமாகப்படவில்லை.
மொத்தத்தில் இப்போது பதவியேற்றிருக்கும் அரசிடமிருந்து கொஞ்சமேனும் தமிழ் மக்களுக்கு அனுசரணை இருக்காது என்றுதான் சொல்லலாம். இனிமேல் ஒவ்வாரு விடயத்துக்கும் போராட வேண்டிய சூழலே தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ளது. அப்படியான ஒரு இக்கட்டில், தமிழ் தேசமும், தமிழ் மக்களும் இருக்கின்றபோது, இவர்கள் எல்லோரும் பொறுப்புடன் பணியாற்ற வேண்டும். அல்லவா!பொறுப்புடன் பேச வேண்டும் அல்லவா!
இனிமேலும் தன்னிச்சையாகப் பேசிவிட்டு அதற்கு வியாக்கியானம் சொல்லி அவமானப்படக் கூடாது.
முதலில் நாடாளுமன்ற முதல் நாள் அமர்வில், அதாவது கன்னி அமர்வில் என்ன செய்ய வேண்டும் என்ற பாராளுமன்ற நடைமுறைகள் மற்றும் மரபு தெரியாதவர்களாகப் பலர் நடந்து கொண்டுள்ளது எனக்கு வருத்தைத் தருகிறது. புத்திஜீவிகள் என்கிறோம். இப்படியான நடைமுறைகளைத் தெரியாவிட்டால் நாடாளுமன்றுக்குப் போக முன் அது தொடர்பாக அனுபவமுள்ள பிறரிடம் கேட்டுக் கற்றுக் கொள்ள வேண்டும். கன்னி அமர்வில் போய் யாராவது பிரச்சிகைளைப் பேசலாமா? முதல் நாள் அமர்வு அன்று எல்லோரும் கோட்டை விட்டவர்களாகத்தான் இருந்தார்கள். கன்னி அமர்வு அன்று சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதுதான் மரபு. அன்று போய் பேப்பரில் எழுதிக் கூட்டி வாசித்துவிட்டு, கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் ஆறு அடித்துவிட்டுப் பெருமைப்படும் துடுப்பாட்ட வீரரைப் போல மு. மு சீவீ நீண்டதொரு பேச்சை எழுதிப் பேசிவிட்டு அமர்ந்ததைப் பார்த்தேன்.சிரிப்பதா? அழுவதா ? என்று தெரியவில்லை.
அவர் பேசிய பேச்சுச் சிறந்ததொன்று என்பதில் ஐயமில்லை. சொல்ல வேண்டிய சங்கதிதான். ஆனால், காலையில் பாட வேண்டிய திருப்பள்ளியெழுச்சியை மாலையில் பாடுவதைப்போல. அவருக்கு என்ன அவ்வளவு அவசரம்? அந்த எழுதிய விடயத்தைக் கொஞ்சம் அவகாசம் அடுத்து, ஆறுதலாக மறுநாள் வாசித்துவிட்டுப் போவது. முன்னமே எழுதி வைத்திருப்பதைத்தானே வாசிக்கப்போகிறார். அதை மறுநாள் வாசித்துவிட்டுப் போவது. விடயம் தெரிந்த வெளிநாட்டவர்கள் அதைப் பார்த்தால் சிரித்திருப்பார்கள். அது மட்டுமல்ல பலர் பல நாட்களாகமனதுக்குள் தேக்கி வைத்திருந்ததைக் கொட்டிவிடுவதைப் போல் பேசித்தள்ளினார்கள். ஆனால் கொரோனா பற்றி யாரும் அவ்வளவு அலட்டிக்கொண்டதாக இல்லை.
தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கூடி அவர்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசி இருக்கிறது என்ற மற்றுமொரு செய்தியும் கைவசம் உண்டு.அவர்கள் மக்கள் பிரச்சினைகளைத்தான் அங்கு பேசினார்கள் என்று நீங்கள் நினைத்தால், அதற்கு நாம் பொறுப்பல்ல.
சர்ச்சைக்குரியவர்களான சுமந்திரனின் பதவியையும், சிறிதரனின் பதவியையும் பறிப்பது பற்றியே அதிகம் பேசப்பட்டதாம்.. சம்பந்தரும் அதற்கு ஒத்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது. (பின்னர் அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று யாழ். பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டு மக்களைக் குழப்பியும் உள்ளது.)
அவர்களுடன் பேசிய பின்னர் சம்பந்தன் சொல்லியதாக வந்த செய்தியைப் பார்த்ததும்,சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.
முன்னர் ஒருமுறை சுமந்திரனின் பேச்சுப் பற்றி விசனப்பட்டுச் செய்திகள் வந்தபோது, சுமந்திரன் பேசியதில் தவறில்லை என்று சொன்ன அதே வாய் காய்வதற்கு முன்னர் சுமந்திரனின் பேச்சால்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தேர்தலில் பின்னடைவைச் சந்தித்ததாகச் சொல்லி இருக்கிறாராம்.
சம்பந்தருக்கு ஏன் இந்த வம்பு? கூட்டமைப்பின் பின்னடைவுக்குக் காரணம் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைவருமே என்பதை சம்பந்தன் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். கூட்டமைப்பின் பின்னடைவுக்குக் காரணம் அதில் இருந்து பிழைவிட்டவனும், அந்தப் பிழைகளைத் தட்டிக் கேட்காமல் நல்ல பிள்ளையபோல இருந்தவனும் என்று எல்லோரும் பொறுப்பாளர்களே. அதில் நான் சுத்தன், ஒன்றும் அறியாதவன் என்று சொல்வதற்கு இடம் இல்லை.
கனடாவில் இருந்து வந்த பணத்தைக் காணவில்லை என்ற போது சற்றுச் சிந்தித்திருந்தால் .! மாவை மகன் பொதுக் கூட்டத்தில் கெம்பி எழுந்தபோது அவரை வெளியேற்று விடுவேன் என்று சொன்ன மாவை, தலையைச் சற்றுத் திருப்பி “தம்பி நீ கை நீட்டி வாங்கிக் கொண்டு வந்த பணம் எங்கே? நீ வேறு பணம் வாங்கியதாக ஒத்துக்கொண்டிருக்கிறாய். பொருளாளரோ அது தன் கைக்கு வரவில்லை என்று சொல்லுகிறார். அப்போது அந்தப் பணத்துக்கு என்ன நடந்தது?” என்றாவது கேட்டிருந்தால் .. ! அதை விடுவோம்.
தேர்தலின்போது தமிழரசுக் கட்சி மகளிர் அணி ஊடகச் சந்திப்பை நடத்தியபோது சரி சிந்தித்திருந்தால் .! மாவை இப்போது நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றம் போனவர்கள் வீட்டிலும் இருக்க வேண்டி வந்திருக்கும். மக்களின் நாடி பிடித்துப் பார்க்கத் தெரியாவர்கள் இவர்கள். எப்படி அரசியல்வாதிகளாக இருக்கப் போகிறார்கள்?
சற்றுப் பின்னோக்கிச் சென்று தேர்தல் களத்தைப் பார்த்தால் சில உண்மைகள் புரியும். வாக்குக் கேட்கச் சென்ற இவர்களிடம் மக்களுக்குச் சொல்ல ஒன்றுமில்லாது ,வெற்றுப் பெட்டியுடனே தான் போனார்கள். “உங்கள் வாக்கைத் தாருங்கள், அதைச் செய்வோம், இதைச் செய்வோம்.” என்று சொல்வதற்கு அவர்களிடம் ஒன்றும் இருக்கவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பலமாக நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள் என்று கேட்டார்களே ஒழிய ஏன் அனுப்ப வேண்டும் என்ற காரணத்தை மக்களுக்குச் சொல்லவில்லை.
இன்று தான் படு தோல்வியடைந்த பின்பு கெம்பி எழும் மாவை தேர்தலுக்கு முன்பு இப்படி நடந்திருந்தால், கட்சியும் காப்பாற்றப்பட்டிருக்கும். மக்களும் சரியாக வழி நடத்தப்பட்டிருப்பார்கள். வாக்களிப்பு வீதமும் அதிகரித்திருக்கும். இது ஒரு புறம் வேட்பாளர்கள் மீது அவதூறு பரப்பப்பட்ட து. மறு புறம் அவர்களை நியாயப்படுத்தி ஒரு குழு அறிக்கைவிட்டுக் கொண்டிருக்க .. மக்கள் குழப்பமடைந்தார்கள். வாக்களிக்க வேண்டும் என்ற விருப்பத்தைக் கைவிட்டுவிட்டார்கள். அதனால் வேண்டாதவர்கள் பலர் நாடாளுமன்றத்துக்குச் சென்றுவிட்டார்கள்.இன்றை அரசியல் சூழலுக்குக் காரணம் எம் மக்களே. ஏறத்தாழ ஒரு இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. அவர்கள் எல்லோரும் வாக்களித்திருந்தால் இன்று நிலைமை வேறாக இருந்திருக்கும் . அது மட்டுமல்லாமல் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் மக்கள் அதிருப்தியோடு இருக்கிறார்கள் என்று அறிந்தபோது, முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தோடு இணைந்து களத்தில் குதித்திருந்தால் நிலைமை வேறாக இருந்திருக்கும். ஆகக் குறைந்தது ஐந்து ஆசனங்களுக்கு மேல் அவர்களுக்குக் கிட்டி இருக்கும். இது ராசி இல்லாத இராஜாவோடு விக்கினேஸ்வரன் இணைந்திருந்ததுதான் மிச்சம். அதனால் இழந்தது அவர்கள் அல்ல, தமிழ் மக்களே பாவிகளானார்கள்.
தேசியக் கட்சி ஒரு ஆசனத்தைப் பிடித்துக் கொண்டு “தமிழ் தேசியத்தை இல்லாது ஒழித்துவிட்டோம். பிரபாகரனின் ஊரையே விலைக்கு வாங்கி விட்டோம். மக்கள் மனதை மாற்றிவிட்டோம்.” என்று ஒரே கூக்குரலிட்டுக்கொண்டிருக்கிறார்கள், சிங்களப் பேரினவாதிகள். ஆனால் நடந்து என்ன? விஜயகலாவின் ஆசனம் அங்கஜனிடம் போய்விட்டது. அவ்வளவுதான்!
அங்கஜன் ஒரு ஆசனத்தைப் பெற்றுக் கொண்டதால் கொக்கரிக்கும் சிங்களப் பேரிவாதிகளைப்போல, தமிழ் பரப்பிலும் தாம் வென்றதை வைத்துக்கொண்டு, ஒட்டு மொத்தத் தமிழ் மக்களினது இதயத்தை வென்றுவிட்டோம் என்று கர்சிப்பவர்கள் இரண்டுபேரும் எடுத்த வாக்குகளின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 63500 எனச் செய்தியில் பார்த்தேன்.

மொத்தத்தில் இவர்கள் மக்களை மடையர்கள் என்று நினைக்கிறார்கள். மாகாண சபைத் தேர்தல் வரும்..! ஆகட்டும் பார்க்கலாம்???

இவ் இணைய வார இதழ் : இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நோர்சி மீடியா பணிமனையில் தயாராகி 23.08.2020 அன்று வெளியிடப்பட்டது.